# இரவல் தாயகம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

ஒக்ரோபர் & டிசம்பர்
1992

இரவல்: 5&6


## நேற்றைய மாலையும்
## இன்றைய காலையும்

I

நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்.

சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்.

பூபால சிங்கம் புத்தக நிலைய
முன்றலில் நின்றோம்
புத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தோம்.

பஸ்நிலையத்தில் மக்கள் நெரிசலைப்
பார்த்தவா றிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்.

சந்தைவரையும் நடந்து சென்றோம்
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர்ச் சந்தியில் ஏறி
பண்ணை வெளியிற் காற்று வாங்கினோம்.

'றீகலின்' அருகே
பெட்டிக் கடையில்
தேனீர் அருந்தி—சிகரட் புகைத்தோம்.
ஜாக் லண்டனின்
'வனத்தின் அழைப்பு'
திரைப்படம் பார்த்தோம்.

தலைமுடி கலைந்து பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்.

II

இன்று காலை
இப்படி விடிந்தது
நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன.
குண்டுகள் பொழிந்தன;
உடலைத் துளைத்து
உயிரைக் குடித்தன.

பஸ்நிலையம் மரணித் திருந்தது.
மனித வாடையை நகரம் இழந்தது.
கடைகள் எரிந்து புகைந்து கிடந்தன
குண்டு விழுந்த கட்டட மாக
பழைய சந்தை இடிந்து கிடந்தது
வீதிகள் தோறும்
டயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன.

இவ்வாருக
இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்.

✱

எம். ஏ. நுஃமான்

## நீறு பூத்த தணல்

மீட்டப்படாத மணவீணையில்
அமுங்கிக் கிடந்த
முகாரி ராகத்தை
ஏன் மீட்டி விட்டீர்?
தரையிற் சிந்தாமல்
தொங்கிக் கிடந்த
கண்ணீர் மழையை
ஏன் சிந்தச் செய்தீர்?
நீறுபூத்த தணலென
எரியாமலிருந்த
எண்ணெய்த்தீயை
ஏன் ஊதி விட்டீர்?
கவிதைகள் பல படைத்து
காவியத்தில் நானொரு
ஓவியமாய்த் திகழ
பாதை காட்டினீரோ?
பலே பலே
எனது கண்களின்
வடிப்பில்
என்னுள்ளத்தின்
தவிப்பில்
உங்களுக்குத்தான்
எவ்வளவு இன்பம்?
□
மரூறா ஏ. மஜீட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்பாட்டு உருவாக்கத்தில் தமிழ் வார இதழ்கள்

**சூரியதீபன்**

**மான்களோடு சேர்ந்தும் ஓடுகிறார்கள்;**
**புலிகளோடு சேர்ந்தும் வேட்டையாடுகிறார்கள்.**

"சனநாயகத்தின் மூன்று தூண்கள் **ஆட்சி, நீதி, நிர்வாகம்.** இவைகள் தவறு செய்கிறபோது, அதைத் தட்டிக் கேட்டு, சரிந்து விழாமல் செய்கிற வேலையை **பத்திரிக்கை** என்ற நான்காவது தூண் செய்கிறது"— பத்திரிக்கை என்ற மக்கள் தொடர்புச் சாதனத்துக்கு முதலாளித்துவ அறிஞர்கள் இன்றளவும் கொடுக்கிற விளக்கமாகும்.

முதல் மூன்றும் ஆட்சி முறையாக இருக்கும்போது, தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், பத்திரிக்கை போன்றவை கருத்துக்களை உருவாக்கும்— மக்களிடையே பரப்பும் தொடர்புச் சாதனங்களாக இருக்கின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களின் சனரஞ்சகத் தன்மை அவைகளை பற்றிய முக்கியமான பண்பு ஒன்றை நினைவூட்டுகிறது.

"சனநாயக ரீதியான சமுதாய அமைப்புக்கள் நடைமுறை சாத்தியமாவதற்கு வேண்டப்படுவன பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள். வெகுசன சமுதாயம் தோன்றுவதற்கும், தொடர்ந்து நிலை பெறுவதற்கும் அதனைக் கட்டிக் காக்கும் சக்திகள் அவசியம். எனவே மக்கள் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியானது, சனநாயக வளர்ச்சியின் உடனிகழ்ச்சியாக காணப்படுகிறது."

"இந்நிலையில் அரசியல் கோணத்திலிருந்து பார்த்தால், அரசியல், ஆட்சி ஆகியவை முக்கியமாகத் தோன்றுகின்றன. பொருளாதார கோணத்திலிருந்து பார்த்தால் உடைமை, உற்பத்தி, வணிகம் போன்றவை பிரதான அம்சமாய்த் தோன்றுகின்றன. ஆனால் நவீன சமுதாய இயக்கத்திற்கு இன்றியமையாததாய், மேற்கூறிய அரசியல் பொருளாதார இயக்கத்திற்கே, மக்கள் தொடர்புச்சாதனங்கள் இன்றியமையாததாகி விட்டன"- கலாநிதி **கைலாசபதி**யின் இக் கூற்றிலிருந்து பத்திரிக்கை சமுதாய இயக்கத்திற்கே இன்றியமையாதது என்பதை விளங்கிக் கொள்ள முடியும். **ரேய்மாண்ட் வில்லியம்ஸ்** கூறுவது போல், "மக்கள் சமுதாயம் முழுவதுமே இன்று மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனமாக அமைந்துவிட்டது."

இத்தகைய சாதனங்களின் பாதிப்பு இரண்டு வகை; 1) செய்திகள் அறிய, பரிமாறிக்கொள்ள (எ.கா.) வானிலை அறிக்கை, இயற்கை நிலை. 2) கருத்துக்கள் அறிதல், உருவாக்குதல், பரப்புதல் — இதுவே பண்பாட்டு உருவாக்கத்தை செய்கிற பகுதி. இவ்வகையில், மக்களின் பண்பாட்டு மதிப்பீடுகளை, வாழ்வியலை, சிந்தனை முறையை உருவாக்குவனவாய் உள்ளன.

மனிதனுக்கு இயல்பாய் உள்ள சிந்தனைத் தூண்டல் அடிப்படையில் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவே,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால், நவீன கருவிகளும், இயந்திரங்களும் பெருகிய நவீன சமுதாயத்தில் எல்லோரும் ஓய்வுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதாகக் கருதிவிட முடியாது. ஐடோ கிரேவன் என்ற சமூகவியலாளர், இது பற்றிச் சரியாகச் சித்தரிப்பார்.

''நவீன சமுதாயத்தின் மிக முனைப்பான அம்சங்களில் ஒன்று ஓய்வு. பழைய அடிமைச் சமுதாய அமைப்பு, ஒரு சிலருக்கே ஓய்வு வசதியை வழங்கிக் கொண்டிருந்தது. இன்றையக் காலத்தில் இயந்திரங்கள் அனைவருக்கும் நிரம்பிய ஓய்வு நேரத்தை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் நடந்தது வேறு. அதிகம், அதிகமானோர் வேலையின்றி வாடவும், மத்தியதர வர்க்கக் குடும்பப் பெண்கள் சோம்பலுடன் வீண் காலங் கழிக்கவும், சமுதாயத்தின் இளைய தலைமுறையினர் கல்வி பயின்று களித்து திரியவுமே யந்திர நாகரீகம் வழிவகுக்கிறது.''

இத்தகைய சூழலிலேதான், மக்கள் தொடர்புச் சாதனங்கள் மனித வாழ்க்கையில், அவர்களுடைய தன்னுணர்வின்றியே பண்பாட்டு ஆக்கிரமிப்பை விளைவிக்கிறது.

தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைத்துறை முதலியவை ஆளும் வர்க்கத்தினரிடமும், திரைப்படத்துறை பெரும்பாலும் முதலாளிகளின் கைகளிலேயேயும் உள்ளன. உழைப்பவரின் ஓய்வு நேரத்தை முற்றுகையிடுகிற கருத்தியல் வேலைகளுக்காக இவைகள் முடுக்கிவிடப்படுகின்றன. பாட்டாளிகளின் அய்க்கியத்தை, விடுதலையைச் சாதிக்க ஓய்வு நேரம் கேட்டு எழுந்தது சிக்காகோ போராட்டம். அந்த அய்க்கியத்தை, விடுதலையை கலாச்சார அளவிலேயே உடைக்கிற வேலையை ஆளும் வர்க்கச் சாதனங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன.

தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், பத்திரிக்கை வாரம், மாதம், மாதமிருமுறை இதழ்கள் அலுவலகம் போவோர், வேலையில்லாதோர், வீட்டு வேலை அற்ற பெண்டிர், மாணாக்கர், அலுவல் மற்றும் வியாபாரம் பத்திரிக்கை போன்ற தொடர்புச் சாதனங்களை மக்கள் நாடுகிறார்கள். தமது நோக்கம் மற்றும் கண்ணோட்டத்துடன், செய்திகள் - கருத்துக்களைத் தருவதால் இவை கருத்துருவாக்கம் அல்லது பண்பாட்டு உருவாக்கத்தை மக்களிடம் செய்கின்றன.

நவீன சமுதாயத்தில், மனிதனின் பல்வேறுவகைப் பணிகளை இயந்திரங்கள் எடுத்துக் கொண்டன. அவனது சிந்தனைத்துறை தவிர, மற்றெல்லாத் துறைகளையும் நவீன கருவிகள் ஆக்கிரமித்துள்ளன. இந்த எல்லை மீறிய ஆக்கிரமிப்பு அல்லது பொருத்தமற்ற ஆக்கிரமிப்பு சிந்தனைத் துறையையும் பாதித்து, ஒரு உருக்கொடுக்கிறது என்பது மறுக்க இயலாதது.

இயந்திரங்களின் வருகை, நிறைய ஓய்வை மனிதனுக்குத் தந்துள்ளது. முன்பு மூன்று மணி நேரம் நடந்து சென்ற தூரத்தை, பத்து மணித்துளிகளில் பேருந்து மூலமோ, ரயில் மூலமோ, கார் மூலமோ கடந்து விடுகிறான். மீதி நேரம் அவனுடைய ஓய்வுச் சேமிப்பில் போய்ச் சேருகிறது.

''நவீன விஞ்ஞான சாதனைகள் சமுதாயத்துக்கு வழங்கிய நன்கொடைகளைப் பயன்படுத்துவதற்கு கூடியளவு ஓய்வு, அதன் பொருட்டுச் செலவிடுவதற்கு அவசியமான வருவாய் முக்கியமானவை. எனவே சமுதாய ரீதியாக ஓய்வு வேளை, பலருக்கும் வெவ்வேறு அளவில் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நவீன குடும்பப் பெண்கள் பலர் (குறைந்தது நடுத்தர வர்க்கப் பெண்கள் வரை) விரைவான முறையில் சமையல் செய்வதற்கான சாதனங்கள் வந்து விட்டன. பல பெண்கள் அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர். ஓய்வு வேளைகள் அவர்களிடம் நிறைய வந்து விட்டன. இன்றைய குடும்பப் பெண்களும் சரி, வேலைக்குச் செல்கிற பெண்களும், அவைகளைக் கழிக்க விரும்புகிறார்கள்''*

---

* *சமூகவியலும் இலக்கியமும்— க. கைலாசபதி.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணமாய் பயணம் செய்வோர் என்று அனைவரையும் சுற்றிக் கை கோர்த்துள்ளன.

## 2

## தமிழ் வார இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும் :

இந்திய மக்களின் வீரஞ்செறிந்த போராட்டம், அந்நிய ஆட்சியைத் தூக்கியெறிந்தது. இந்த விடுதலை தங்களுக்குத் தேவை என்பதை இந்திய பெருமுதலாளிகள் உணர்ந்தனர். கடன் வாங்கிய தொழில்நுட்பமும் மூலதனமும் இருந்தாலும், ஏகாதிபத்திய நாடுகளை அதற்காகச் சார்ந்து இருந்தாலும், இந்தியா என்ற மிகப் பெரிய சந்தையை இந்திய ஆளும் வர்க்கங்கள் தங்கள் கைகளிலிருந்து இழக்கத் தயாராக இல்லை. அந்நிய மூலதனம் பெருநதியாக இந்தியத் தொழிலில் தங்கள் மூலமாகவே பாய வேண்டும் என்று விரும்பினர். அந்நியன் எடுப்பதும், கொடுப்பதும் இவர்களின் சுயநலன் சார்ந்தே இருக்க வேண்டும் என எண்ணினர். இந்திய சுதந்திரப் போராட்டம், இந்த சுய நலனுக்கானத் திறவுகோலைக் கையில் கொண்டு வந்து தரும் என்பதால், திறவுகோலைக் கையில் தரும் தேவதூதர்களாக காந்தி போன்றவர்கள் விளங்கியதால் அந்தத் தலைமையை, அதன் கீழான போராட்டத்தை தட்டிக் கொடுத்து, ஊக்குவித்தனர்.

இந்திய விடுதலைக்குப் பின் பன்னாட்டு நிறுவனங்களின் மூலதன, தொழில்நுட்ப உதவியுடன் தொழிற்சாலைகளைப் பெருக்கினர். ஏகாதிபத்தியங்கள் கழித்துக் கட்டிய தொழில் நுட்பமும் கருவிகளுமே இறக்குமதி செய்யப்பட்டாலும், இந்தியாவுக்கு அவை புதியன. அவைகளை இயக்குவதற்கு பழைய கைவினைஞர்கள், தொழிலாளர்கள் தோதுப்படாமல், சுற்றறிந்த தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். தொழில் உறவுகளை நடத்திச் செல்ல நிர்வாக அலுவலகங்கள், கம்பெனிகள், ஏஜென்சிகள் உருவாகின; இவைகளை நடத்திச் செல்ல படித்த மூளைகள் தேவைப்பட்டன. மெக்காலே கல்வியினால் மலிவாக அறிவுத்துறை உழைப்பையும் வாங்க முடிந்தது. எனவே இந்தியப் பெருமுதலாளிகளின் வளர்ச்சி யினூடே, வெகுசனக் கல்வி அல்லது கல்வியை வெகுசன மயமாக்குதல் தவிர்க்க முடியாத நிகழ்வாகியது.

இந்த வரலாற்றுப் போக்கினூடேதான், தமிழகத்தில் காமராசர் இலவச கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்து கிறார். 1951-ல் அவர் முதலமைச்சராகப் பதவியேற்றபின் ஊர் ஊருக்குப் பள்ளிகள் எழுந்தன. சாதாரண வீட்டுப் பிள்ளை களும் கற்றுவர வேண்டுமென்பதற்காக, மதிய உணவுத் திட்டம் அப்போது அறிமுகப்படுத்தப்பட்டது.

50-களில் தமிழகத்தில் திறந்து விடப்பட்ட பள்ளிகள், வகுப்பறைகள், 60-களின் மத்தியில், 70-களின் தொடக் கத்தில் கல்வி கற்ற ஒரு பெருங் கூட்டத்தை உருவாக்கியது. நாணயத்தின் மற்றொரு பக்கமான வேலையற்ற பட்டாளத் தையும் அள்ளி விட்டிருந்தது.

கிராமங்களில் படித்து வேலையற்றவர்களும், படித்து வேலைக்குப் போனவர்களும் பழைய கால மனிதர்களைப் போல் மடங்களில் கூடி தூங்கிக் கழிக்கவில்லை. மடங்களில் மரத்தடிகளில் உட்காருகிறபோது கூட, அவர்களின் கையில் ஒரு வாரப் பத்திரிகை அமர்ந்தது. பக்கத்து சிறு நகரங்களுக்கு திரைப்படங்களுக்குப் போயினர். சைக்கிள் சிறந்த வாகன மாயிற்று. திரும்பி வருகையில், அவர்கள் கையில் சினிமா புத்தகமோ, வாரப்பத்திரிகையோ தொத்திக் கொண்டிருந்தது. படித்த பெண்கள் பாரதம், புராணங்களுக்குப் பதில் குமுதம், ஆனந்த விகடனை கைகளில் ஏந்தினர். நகரங்களில் இந்தத் தொகை பன்மடங்காகப் பெருகியது.

கல்வி சனநாயகப் படுத்தலினால் உருவான இந்த இளம் பட்டாளத்தை, ஆளும் வர்க்கங்களின் அறிவுப் பிரதிநிதிகள் சரியாகவே கணக்கெடுத்தனர். பத்திரிக்கைகளுக்கான வியாபாரச் சந்தை, நகர வீதிகளிலிருந்து சிறு கிராம மூலை வரை அவர்களுக்குத் தென்பட்டது.

50-களில் கல்கி, குமுதம், ஆனந்த விகடன் என்றிருந்த மூன்றே வாரப் பத்திரிக்கைகள் 60-ன் மத்தியில் தொடங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'70-ல் சாவி, இதயம் பேசுகிறது, தினமணிக்கதிர், குங்குமம் ஆகியவார இதழ்கள்எனபெருகி, இன்று இருபதுக்கு மேற்பட்டவையாக ஈசல் பிறப்பாக பறப்பதின் அடித்தளம் இதுதான்.

'80-களில் ஜூனியர் விகடன், தராசு, கமலம், தாய், வசந்தம் வருகிறது, நக்கீரன், நமது நிருபர், விசிட்டர், விசிட்டர் லென்ஸ் போன்ற எண்ணற்ற இதழ்கள் தோன்றின. இவைகளில் சில நின்றும் போய்விட்டன. இவைகளுடன் தீம்தரிகிட, துக்ளக், மக்கள்பிரச்னை, உதயம், சுஜாதா போன்ற மாதமிருமுறை இதழ்களையும், மாத இதழ்களையும் உள்ளடக்கலாம். ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த பத்திரிக்கைகள் அல்லது பத்திரிக்கைகளிலிருந்தவர்கள் லாப நோக்கத்திற்காக புதியவார இதழ்களைத் தொடங்கினார்கள். புதியவர்களும் தொடங்கினார்கள். உண்மையில் தொடக்கத்தில் கல்கியிலிருந்து தொடங்கப்பட்டது 'ஆனந்தவிகடன்'. ஆனந்த விகடனிலிருந்த சாவி என்பவர் தொடங்கிய பத்திரிக்கை 'சாவி'; மணியன் தொடங்கியது 'இதயம் பேசுகிறது'. தினமணி பத்திரிக்கையிலிருந்து நடத்தப்பட்டது 'தினமணிக் கதிர்'. முரசொலி தொடங்கியது 'குங்குமம்'. அண்ணா பத்திரிக்கை ஆரம்பித்தது 'தாய்'. பிறகு ஆனந்த விகடன் குடும்பத்திலிருந்து 'துக்ளக்', 'ஜூனியர் விகடன்', துக்ளக்கிலிருந்து பிரிந்தவர்கள் 'விசிட்டர்', அதிலிருந்து 'விசிட்டர் லென்ஸ்' பின்னர் 'உங்கள் விசிட்டர்'.

லாப நோக்கம், சந்தை என்று வந்தபின் தொழிற்சாலை வடிவம் தவிர்க்க முடியாதது. பொருட்களை உற்பத்தி செய்யும் உடல் உழைப்புக்குப் பதில் அறிவு ஜீவிகளின் குறிப்பாக எழுத்துத் துறை மூளைகள், பேனாக்கள் அதிகம் தேவைப்படுகின்றன. வேறு சில நுண்ணிய வித்தியாசங்கள் இருக்கலாம்.

அறிவுத்துறைச் சுரண்டலால், லாபக்கிணறுகளை நிறைப்பதற்கான நீரோட்டம் சமுதாய அடி நிலத்தில் ஓடிக் கொண்டிருப்பதை அறிந்தவுடன் முதலாளிகள் ஊற்றுத் தோண்ட ஆரம்பித்தனர். புதிய முதலாளிகள் உருவாகினர். பண முட்டைகளின் பிடியில் பத்திரிக்கைகள் சிக்கின. தொழிற்சாலைகள் போல், பத்திரிக்கைகள் முதலாளிகளுக்கான கருத்துத் தொழிற்சாலைகளாயிற்று.

வயது, பால், வாசகர் ஆர்வங்களுக்கேற்ப அனைத்துத் தரப்பினருக்கும் ஒரே முதலாளியிடமிருந்தே தமிழில் வித விதமான இதழ்கள் வந்தன.

1. ஆனந்தவிகடன்:- துக்ளக், ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட்
2. குமுதம்:- கல்கண்டு, மாலைமதி
3. இந்தியன் எக்ஸ்பிரஸ்:- தினமணி, தினமணிக்கதிர், சினிமா எக்ஸ்பிரஸ்
4. தினத்தந்தி:- மாலை முரசு, மாலை மலர், தேவி, ராணி, ராணிமுத்து, ராணி காமிக்ஸ்
5. டால்டன் பிரஸ்:- பொம்மை, மங்கை அம்புலிமாமா
6. கல்கி:- கோகுலம், மங்கையர் மல
7. முரசொலி:- குங்குமம், வண்ணத்திரை, முத்தாரம், குங்குமச்சிமிழ்

மாநில மொழியளவிலான இந்தப் பத்திரிக்கைப் பின்னல் அகில இந்திய அளவில் மிகப் பெரியதாக இருப்பதைக் காணலாம்.

இந்தியன் எக்ஸ்பிரஸ்:- (ராம்நாத் கோயங்கா) இந்தியாவில் 12 மையங்களில் இருந்து வெளி வருகிறது. தவிர மாநில மொழிகளில் தினமணி (தமிழ்), ஆந்திர பிரபா (தெலுங்கு), கன்னட பிரபா (கன்னடம்), லோக சத்தா — ஜனசத்தா (இந்தி)





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பெனட் கோல்மன் கம்பெனி:-** டைம்ஸ் ஆப் இந்தியா (ஆங்கிலம்), பாரத் டைம்ஸ் (இந்தி), மகாராஷ்டா டைம்ஸ் (மராட்டியம்) மற்றும்வார, மாத மிருமுறைகள். மொத்தம் 14.

அரசியல், பொருளாதாரம், அறிவியல், திரைப்படம், வேலை வாய்ப்பு குழந்தை மனம் என்று கருத்தியல் தளம் பல்வேறு வகைகளில் நிலவுகிறது. இவைகள் அனைத்தையும் ஒரே பத்திரிக்கையில் கலந்து தருவதை விட, ஒவ்வொன்றுக்கும் உரிய பெருத்த எண்ணிக்கையிலுள்ள வாசகர்களை தனித் தனியாக பத்திரிக்கைகளை நடத்துவதன் மூலம் வளைத்துப் போடுவது எளிது.

சொந்தமாகத் தொழில் செய்து முன்னேறுவது எப்படி, உழைத்து உயர்ந்தவனாவது எப்படி என்று முதலாளித்துவ கோட்பாடுகளை முன் தள்ளும் கட்டுரைகள் முன்பு வார இதழ்களில் வந்தன. அப்துல் ரகீம், தமிழ்வாணன் போன்றோரது நூல்களும், வேலை தேடலில் இருப்போர்க்கு ஆன்மீகத் தீனி போட்டன. இவைகளை விட நேரடியாக வேலை வாய்ப்பு விளம்பரங்கள் வெளியிடல், தனியார் நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்திவிடல் என்பவைகளுக்காக, **எம்ப்ளாய்மென்ட் நியூஸ், கைடு லைன்ஸ்** போன்ற பத்திரிக்கைகள் தோன்றி, கொள்ளை லாபம் கொண்டன.

வார, மாத இதழ்களில் பெண்களுக்கென தனிப் பகுதிகள் வெளியிடப்பட்டு வந்த நிலை மாறி, பெண்களுக்கு என்றே மாத, மாதமிருமுறை பத்திரிக்கைகள் வரத் தொடங்கி உள்ளன. இவை வார இதழ்களாக வருகிற சூழல் இன்னும் வரவில்லை. ஒப்பீட்டு அளவில் படித்த பெண்களின் தொகை அதிகரித்திருப்பதும், படித்த பெண்கள் வருவாய் ஈட்டுபவர்களாக ஆகியிருப்பதும், பெண்களிடையே படிக்கும் பழக்கம் மிகுந்து வருவதும், பெண்களுக்கென்று தனியே பத்திரிக்கைகள் தோன்றுவதற்கான அடித்தளங்கள். ஏற்கனவே பத்திரிக்கைத் துறையில் உள்ள முதலாளிகள், இந்த வளர்ச்சி நிலையை நூல் பிடித்து வாய்ப்பாக்கி பயன்படுத்திக் கொள்கின்றனர். எல்லா மகளிர் இதழ்களுக்கும் உள்ளடக்க வாய்ப்பாடுகள் ஒன்றுதான். சிறந்த சமையற்காரியாக, சிறந்த பக்தையாக, தாய், தந்தை, கணவன், பிள்ளைகளுக்கு சிறந்த தொண்டூழியம் செய்பவளாக, அழகுப் பொம்மையாக, அவ்வப்போது சில லட்சிய முழக்கம் உதிர்ப்பவளாக, பெண் என்ற சாயத்தை கெட்டியாகத் தரிசிக்க வைப்பவை. பெண்கள் சுதந்திரமாகப் பறக்க விரும்புகிறார்கள். இந்த நேரத்தில் புதிய வானம், புதிய திசைகளை இந்தப் பத்திரிக்கைகள் சுட்டிக் காட்டுவதில்லை. மாறாக இத்தகைய சுதந்திர எண்ணங்களை காசாக்கிக் கொள்கின்றனர். இறக்கை வெட்டிய கிளிகளாய், மீண்டும் கூட்டுக்குள் அடைக்கிற வேலையைச் செய்கின்றன.

## 3

### புத்தகக் கல்வி முறை அழிப்பு:

பெரும்பாலும் வார இதழ்களை அலுவலகங்கள் போகிறவர்கள், நகர்ப்புற நடுத்தர மக்கள், கிராமப்புற படித்தவர்கள் ஆகியோர் ஏதோ ஒரு புதிய செய்தியை அவைகள் தமக்குத் தரும் என்ற நம்பிக்கையிலேயே ஏந்துகின்றனர். சிலரிடம், குறிப்பாக நாற்காலிகளில் உட்கார்ந்து பணியாற்றுகிறவர்களிடம், பயணம் போவோரிடம் கற்பதற்கான உயரிய நோக்கம் எதுவும் இல்லை. அலுவலகத்திற்காக பயணம் போகிற நேரத்தில் பேருந்துகளில், ரயில்களில் பொழுது போக்கும் துணையாகவும் பயன்படுத்திய பின் எறிந்து விடுகிற ஒரு நுகர் பொருளாகவுமே வார இதழ்கள் பயன்படுகின்றன. ஆழமாக அனுபவித்தல், கற்றுக் கொள்ளல், கற்றுக்கொடுத்தல் என்று ஒரு புத்தகத்தில் பெறப்படும் அனுபவங்கள் ஏதும் வார இதழ்களில் இல்லை.

நூல் அல்லது இலக்கியம் மனித வாழ்வு அனுபவத்தின் தொகுப்பு. சமூகத்தில் மனிதனின் சொந்த அனுபவங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட, வெளியிலிருந்து பெறப்படும் அனுபவங்களே மிகுதி. சொந்தப் பட்டறிவிலிருந்து பெறப்படுவதை விட, சமுதாயத்திலிருந்து சமுதாய மாந்தரின் அனுபவங்களிலிருந்து பெறப்படும் அறிவு, படிப்பினை, கற்றல் மிகுதியாகும்; மனித மூளையில் புத்தகங்கள் தீண்டும் போது எதிர்வினைகள் ஆற்றப்படுகின்றன. உற்பத்தியாகும் கருத்துக்கள் விநியோகமாகும்போது மீண்டும் உற்பத்தி விநியோகம் என்ற முறை, சிந்தனை வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

ஆனால் வார இதழ்கள் ஆழமான சிந்தனைத் தாக்கமின்றி மறுசிந்தனை உற்பத்தியை தடுக்கின்றன. சிந்தனைச் சோம்பலை, பொழுதுபோக்குத் தன்மையை, நுகர்வுக் கலாச்சாரத்தை வார இதழ்கள் ஏற்படுத்துகின்றன. புத்தகங்களுக்குப் போவதை, வார இதழ்கள் தடுத்து நிறுத்துகின்றன. நாவல்கள் படிப்பதைக் கூட அவர்கள் விரும்புவதில்லை. அந்த அளவு சிந்தனைச் சுமையைக் கூட தாளாத, லேசான மூளை உருவாக்கப்பட்டுள்ளது.

வாசகனிடம் ஒரு நல்ல புத்தகம் கொண்டு வந்து சேர்க்கிற, தொடர்ச்சியாகவும் தர்க்க ரீதியாகவும் சிந்திக்கக் கூடிய ஆற்றலை, இந்தப் பத்திரிக்கைகள் சிதறடிக்கின்றன. தொடர்ச்சியாகவும், தர்க்க ரீதியாகவும் சிந்திக்கக் கூடிய இந்த ஆற்றல் ஒரு வாசகனை படைப்பாளியாக உயர்த்துகிறது. சமூக செயலாற்றல்மிக்கவனாக மாற்றுகிறது. ஒரு மனிதனை, சமூக சக்தியாக உயர்த்துகிற ரசாயனத்தை, கவிதை, கதை, கட்டுரை, ஆய்வு என்ற எந்த ஒரு நல்ல படைப்பும் செய்கிறது.

சமூக மனிதனாக உருக்கொள்வது, சிந்தனை, ஆற்றலால் சாத்தியமாகும். எனவே ஒரு வாசகன் சிந்தனையாளனாய், படைப்பாளியாய் உருக்கொள்வதையும் வார இதழ்கள் தடை செய்கின்றன. ஒரு நல்ல வாசகனைத் தர முடியாத எழுத்துலகம், ஒரு நல்ல படைப்பாளியைத் தர முடியாது. தமிழ்க் கலை, இலக்கிய உலகில் சிறந்த படைப்பாளிகள், படைப்பாற்றல் புஷ்பிக்க முடியாமல் மலடு தட்டிப் போனதற்கான

காரணங்களை இந்த வார இதழ்களின் பெருக்கத்தோடு பொருத்திப் பார்க்க வேண்டும். படைப்பாற்றலில் ஒரு கீழிறக்கம் நிகழ்ந்துள்ளதை, கடந்த கால இலக்கிய கனபரிமாணங்களில் மட்டுமல்ல, எண்ணிக்கை அளவிலும் இந்தப் பின்னணியில் காண முடியும்.

தொடர்ச்சியாகவும், தர்க்க ரீதியாகவும் சிந்திக்கும் ஆற்றலை இழப்பவர்கள், ஆளுமையை இழந்து போகிறார்கள். சிறந்த படைப்பாளிகளின் வரிசை நிலை குலைந்து, பட்டுக்கோட்டை பிரபாகர், ராஜேஷ் குமார், ராசேந்திர குமார் என்ற வரிசையை, தீவிரத்தன்மை குலைக்கப்பட்ட, ஆளுமை சிதைக்கப்பட்ட நுகர்வுக்கலாச்சாரத்தின் பிம்பங்களாகக் காணலாம்.

இதழ்கள் படிப்பது, புத்தகப் படிப்பை அழிக்கிறது என்பது எவ்வளவு உண்மையோ, அதே போல், சிலவகை அல்லது சிலரது புத்தகங்களை விரும்பிப் படிக்கிற பழக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த இதழ்கள் மூலம் அறிமுகமாகிறவர்கள் மட்டுமே எழுத்தாளர்களாக அங்கீகரிக்கச் செய்கிறது. சாண்டில்யன், லட்சுமி, சுஜாதா, சிவசங்கரி, இந்துமதி, பாலகுமாரன், ரமணிசந்திரன், தமிழ்வாணன் போன்றவர்களின் வாசகர்களாக என்று சொல்வதை விட, நுகர்வோர்களாக (Consumers) ஆகியிருக்கிறார்கள். இவர்களின் எழுத்துக்கள் நூலாக வருவது மட்டுமல்ல; மறுபதிப்புகளும் வெளியாகின்றன. இந்நூல்களை வைத்திருக்கின்ற வாடகை நூல் நிலையங்கள் (Lending Libraries) இத்தகைய வாசகர் பெருக்கத்திற்கு தீனி போட்டு வளர்த்தன.

போகிற போக்கில் பார்த்து விட்டு, போகிற போக்கில் வீசிவிட்டுப் போகிற மாத நாவல்களை இந்த சிந்திக்கும் கஷ்டமேயில்லாத தளத்தில்தான் வார இதழ்களால் உருவாக்க முடிந்தது. சிந்திக்கும் அவசியமற்ற நுகரும் தன்மை மட்டுமே போதுமான வாசகர் கூட்டத்தை ஏற்கனவே உருவாக்கி வைத்திருந்தது. மாத நாவல்கள் மிகக் குறுகிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தில் 'ராஜ கம்பீரமாய்' பட்டணப்பிரவேசம் வர ஏதுவாகியது.

**ஒரே தரப்படுத்தல்:**

வாசகனின் தரத்தை உயர்த்துதல் அற்றுபோய், ஆளுமை சிதைக்கப்பட்ட ஒரே மாதிரியான வாசகர்கள் உருவாக்கப் படுகிறார்கள். வாசகனின் தனித் தனி அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன.

இதற்கு முதல் கட்டமாய் இதழ்களின் தனி அடையாளம் அழிக்கப்படுகிறது. தேவி, ராணியில் எழுதுகிற ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர் குங்குமம், கல்கி, விகடனிலும் இடம் பெறுகின்றனர் என்பதே இதற்குச் சான்று.

முன்பு குமுதத்துக்கென்று வாசகர்கள் உண்டு; அவர்களுக்கு விகடனின் தரம் பிடிபடாதது. குமுதம், விகடன், கல்கி மூன்றும் உள்ளடக்கம், வெளிப்பாடு, வாசகன், சந்தை என்ற எல்லா வகைகளிலும் வேறுபட்டவை. இந்த வணிகமயமாக்குதலில், வார இதழ்களுக்கிருந்த கொஞ்ச நஞ்ச இலக்கியப் பண்புகளும் அழிக்கப்பட்டன. சனாதன புனிதங்கள் கூட புறந்தள்ளப்பட்டன. தேவைப்படும் போது சில புதுப் பூச்சுடன் கொண்டு வரப்படும். (கல்கி விகடன்) பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு இதழுக்கென்று தனித்த எழுத்தாளர்கள் உண்டு.

குமுதத்தில் சாண்டில்யன், ரா.கி.ரங்கராசன், சுஜாதா, பி.எம். கண்ணன்; கல்கியில் அகிலன், நா. பார்த்தசாரதி, இந்திரா பார்த்தசாரதி, கி. ராசேந்திரன்; ஆனந்தவிகடனில் ஜெயகாந்தன், லா. ச. ராமாமிர்தம், தி. ஜானகிராமன், ஜெகசிற்பியன், சிவசங்கரி என்ற பட்டியலுண்டு.

இப்போது ஒவ்வொரு இதழின் கலவையிலும் மாறுபட்டு, அனைத்து இதழ்களும் ஒரே கலவையாக உருவம் கொண்டு விட்டன. பெயர்களில் மட்டுமே, இதழ்களுக்கிடையில் வித்தியாசம் உண்டு. எல்லா எழுத்தாளர்களும், எல்லா இதழ்களிலும் இடம் பெறத் தொடங்கிவிட்டார்கள். எழுத்தாளர்களும் இந்த வித்தியாசங்களைப் பொருட்படுத்துவதில்லை.

ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, தி. ஜானகிராமன், லா.ச. ராமாமிர்தம் ஆகியோரின் கதைகளை சிறப்பு முத்திரை கதைகளாக ஆனந்தவிகடன் ஒரு கட்டத்தில் வெளியிட்டு வந்தது. சிறு இதழ்களில் சிறந்த படைப்பாளிகளாய் அங்கீகாரம் பெற்றவர்களின் படைப்புக்கள் வெளியாயின. அதனுடைய வணிக நோக்கத்துக்கே கூட இப்படி 'தரமான' அங்கீகாரம் தேவைப்பட்டது. இன்று அதனுடைய வியாபார நோக்கத்திற்குக்கூட முத்திரைக் கதைகள் தேவையற்றதாகி விட்டன.

இதனால் ஒரு குறிப்பிட்ட தன்மையில் அடையாளம் காட்டக்கூடிய வாசகத்தரம் அழிந்துபோய், ஒரே வாசகத் தரம் உருவாகிறது. தரத்தை உயர்த்துதல் என்பதற்கு பதில், தரத்தை சமன்படுத்துதல் என்ற எதிர்நிலையை வார இதழ்கள் செய்துள்ளன.

இன்று பத்திரிக்கை இயலும் (Journalism) நுகர்வோர் பண்பும் (Consumerism) ஒரே கோட்டில் இணைந்து பயணம் செய்கின்றன. நுகர்வுக் கலாச்சாரத்திற்கு ஏற்ற வகையில் இலக்கியப் பண்புகள் கூட பயன்படுத்தப்படுகின்றன.

**உண்மையைப் புதைகுழிக்கு அனுப்பு:**

தொழிலாளர்களின் நூதனப் போராட்டம். தங்களது கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களைப் பார்த்திருக்கிறோம். உற்பத்தி முடக்கம் செய்வதே இத்தகைய போராட்டத்தின் குறிக்கோள். இதனால் ஆலை நிர்வாகிகளும் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்களும் பாதிப்புக்கு ஆளாகி, தொழிலாளர் குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்பதைப் பார்க்கிறோம். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னை அம்பத்தூர் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள், தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி நூதனப் போராட்டத்தை நடத்தினார்கள். வேலை நிறுத்தம் செய்யாமல், முழக்கம் போடாமல், ஆர்ப்பாட்ட ஆரவாரம் இல்லாமல், சட்டை அணியாமல் தொடர்ந்து வேலை செய்து தங்கள் உணர்வை வெளிப்படுத்தினர்''.

இது, ஆனந்தவிகடனில் படத்துடன் வெளியிடப்பட்ட செய்தி.

தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியது உண்மை. அது எந்தவகைப் போராட்டம்? பாம்பும் சாகாமல், கோலும் முறியாமல் நடத்துகிற காந்தீயப் போராட்டமா என்ற கேள்விகள் முக்கியமானவை.

தொழிலாளர்கள் சுரண்டலுக்கு ஆளானார்கள். அதனாலேயே போராடியனார்கள் என்ற உண்மை; அந்தப் போராட்டத்தின் விளைவு, தொழிலாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதா? அதன் பயன் நீடித்து நிலைத்து நின்றதா? அப்படியானால் பயன்தரும் அந்தப் போராட்ட வடிவத்தை, தொழிலாளர்கள் தொடர்ந்து ஏற்றுச் சென்றார்களா என்ற உண்மை— இப்படி அந்தச் செய்திக்கு முன்னும் பின்னும் இருக்கிற உண்மைகள் நறுக்கப்பட்டு, நடுவிலுள்ள முண்டம் மட்டுமே செய்தியாகத் தரப்படுகிறது.

வார இதழ்கள் இந்த அரைகுறை உண்மைகளின் ஆசான்களாக விளங்குகின்றன. இதனால் வாசகர்கள் சொந்த வாழ்விலோ, இலக்கியத்திலோ உண்மை நேரே வரும் போது ஏற்றுக்கொள்ளும் திராணியற்றுப் போகிறார்கள். உண்மையை ஜீரணிக்கும் துணிவற்றுப் போய், எதிர்க்கத் தொடங்குகிறார்கள்.

குமுதம் இதழில் சுஜாதாவின் **ரத்தத்தின் நிறம் சிவப்பு** தொடர்கதையில் **சாணார்** என்ற குறிப்பு வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் முடியும்வரை அவர்கள் அவ்வாறே அழைக்கப்பட்டார்கள். பெண்கள் மாராப்புத் துணி அணிய மறுக்கப்பட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவ்வாறு விதிக்கப்பட்டிருந்தது. இது வரலாற்று நிகழ்வு. இதையே சுஜாதா எழுதியபோது தங்கள் சாதி கேவலப்படுத்தப்பட்டதாக, நாடார் சாதி இளைஞர்கள் கோபமுற்று எதிர்ப்பு எழுப்பினர். சுஜாதா வருத்தம் தெரிவித்தார். குமுதம் மன்னிப்புக் கோரியது. தொடர் நிறுத்தப்பட்டது.

சாதிகளை எதிர்த்துச் சாடி அழித்தல் என்பது எழுத்தாளனின் நிலைபாடாக இருந்திருக்க வேண்டும். படைப்பிலக்கியத்திலும் இத்தகைய சமூக அசிங்கங்களை படைப்பாளிகள் எதிர்க்க வேண்டும். ஆனால் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பொய்த்தோற்றமும், சாதிகளும் நிலவ வேண்டும் என்ற சமரசமும், போலித்தனமும், உண்மைகள் மறைக்கப்பட்ட நிலையும்தான், இலக்கிய அளவில் ஒரு உண்மை வெளிப்பட முடியாத அவலத்தை உண்டாக்கிற்று.

**சிறுவர்களற்ற உலகம் :**

''ஒரு டி.வி. தனக்கு முன்னால் வயது வித்தியாசமில்லாமல் அனைவரையும் அமர வைக்கிறது. செய்திகள், நிகழ்ச்சிகளைத் தருவதில் சிறுவன், வாலிபன், முதியவர் என்ற வேறுபாட்டை பின்தள்ளிவிடுகிறது. ஒரு வாலிபனுக்குத் தெரிவது ஒரு சிறுவனுக்கும் தெரிகிறது. தற்காலச் சமுதாயம் சிறுவர்களற்ற சமுதாயமாக மாறிவருகிறது.'' என **போஸ்டுமான்** குறிப்பிடுவார்.

தொலைக்காட்சிக்கென அவர் குறிப்பிட்டாலும், சற்றேறக் குறைய அனைத்து மக்கள்தொடர்புச் சாதனங்களுக்கும் இது பொருந்தும். வானொலி எல்லோருடைய காதுகளையும் தனக்கு முன் சமமாகவே நிறுத்திக் கொள்கிறது. 'நிரோத்' முதல் 'கோர்பீ' வரை எல்லோருக்கும் கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது. வயது, உணர்வு என்ற படிநிலைகள் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்திரிக்கைகள் இந்த குணாம்சத்தை தமக்குள் இன்னும் அதிகமாய் பூட்டிக்கொண்டவை. குமுதம், குங்குமத்தில் வருகிற கதைகள், செய்திகள், சித்திரங்கள் அனைத்து வயதினரையும் தொடுகின்றன. ஒரு காலத்தில் அனைவரையும் முதிர்ந்த பெரியவர்களாக எண்ணி செய்திகளை அளித்து வந்த கல்கி, இப்பொழுது எல்லோரையும் வாலிபர்களாக பார்க்கத் தொடங்கி விட்டது.

ஒரு சிறுவன் தன் பெற்றோர்களிடமிருந்து கற்றுக் கொள்வதே அதிகமாக இருந்தது. ஏனெனில் சிறுவனின் உலகம், பெற்றோரின் உலகமாக இருந்தது. பெற்றோரின் பாரம்பரிய குணங்கள், போதனைகள், வழிகாட்டல்கள் அந்தச் செடிக்கு ஊட்டப்பட்டு, அவையே வெளிப்பட்டன.

ஆனால் நவீன சமுதாயத்தில் இன்றைய குழந்தை தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கைகளின் குழந்தையாக இருக்கிறான். குடும்பத்திலிருந்து, குடும்ப உறுப்பினர்களிடமிருந்து கற்றுக் கொள்வது சொற்பமே. பெற்றோரின் கூடுதல் பொறுப்பும், வழிகாட்ட வேண்டிய கடமையும் இந்த இடத்தில் அவசியமாகிறது. சமுதாய நோக்கம் எதுவுமில்லாததால் நவீன மக்கள்தொடர்புச் சாதனங்கள் பெற்றோர்களின் சுமையைக் கூட்டியுள்ளன. எது உண்மை, எது மாயத் தோற்றம், எது பழைய மதிப்பீடுகள், எவை புதியவை, எவை என்ன நோக்கத்திற்காக முன் வைக்கப்படுகின்றன என்ற விமர்சனக் கண்ணோட்டத்துடன் சிந்தித்து, தங்களை தகுதிப் படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பெற்றோர்கள் ஆளாகியிருக்கிறார்கள். மக்கள்தொடர்புச் சாதனங்கள், பெற்றோர்களை அறிவு விழிப்புப் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என எதிர்மறையில் சொல்கின்றன.

(மிகுதி அடுத்த இதழில்...)

சரவணபாலு பதிப்பகம் (இந்தியா)



# தமிழ் சினிமாவும்
# இலங்கையில் அதன் செல்வாக்கும்

## தேசிய சினிமா பற்றிய சில சிந்தனைகள்

o

உலக திரைப்பட உற்பத்தியில் இந்தியா இப்போது முதலாவது இடத்தை வகிக்கின்றது. ஆண்டுதோறும் சராசரி 400 திரைப்படங்களை இந்தியா உற்பத்தி செய்கின்றது. சென்னையும் பம்பாயுமே இந்தியத் திரைப்படத் தொழிலின் கேந்திர நிலையங்களாகும். சில வகையில் பம்பாயை விடவும் சென்னையே முதல் இடம் பெறுகின்றது. அநேக இந்திப் படங்கள் சென்னையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. பெருந் தொகையான முதலீட்டோடு, இந்திய சினிமாத் தொழிலின் முக்கிய மையமாக சென்னை திகழ்கின்றது. ஏகபோக முதலாளித்துவ உற்பத்தி முறையின் சகல அம்சங்களும் தென்னிந்தியத் திரைப்படத் தொழிலிலும் காணப்படுகின்றன.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் பிரதான நோக்கம் லாப மீட்டலாகும். தமிழ்த் திரைப்படத்தின் நோக்கமும் அதுவே. தமிழ்த் திரைப்படத்தை ஒரு கலை முயற்சி என்பதை விடவும், பொதுசனத் தொடர்புச் சாதனம் என்பதை விடவும், ஒரு தொழில் முயற்சி என்பதே மிகவும் பொருத்தமானது. அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் போன்ற பெரிய முதலாளித்துவ நாடுகளிலும் திரைப்படம் லாப மீட்டித் தரும் ஒரு தொழிலாகவே அமைந்துள்ளது. எனினும் அந் நாடுகள் எல்லாம் உலகின் மிகச் சிறந்த நெறியாளர்கள் பலரையும், உலகின் மிகச்சிறந்த திரைப்படச் சிருஷ்டிகள் பல வற்றையும் தந்துள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றின் பெருமையை வலியுறுத்தி சம நிலையற்ற தீர்வுகள் வழங்கப்படுகின்றன. பணத்தை விட பாசம் தான் பெரிது; உயிரை விட மானம்தான் உயர்ந்தது; காதலை விட கடமை தான் உயர்ந்தது என்று நிரூபிப்பதற்காகவே கதைகள் பின்னப்படுகின்றன. உண்மையில் நடைமுறைவாழ்வில் இருந்து தப்பிச் செல்லும் பண்பின் ஒரு வெளிப்பாடே இதுவும்

பகுத்தறிவுக்குப் பொருந்தாத சம்பவங்கள் தமிழ்ப்படத்தில் எல்லையற்று இடம் பெறுகின்றன. தேவரின் படத்தில் வரும் மிருகங்களுக்கு மனிதனைவிட அதிக அறிவும் சிந்தனை ஆற்றலும் வந்து விடும். உதாரணமாக தேவரின் 'தெய்வச் செயல்' படத்தில் வரும் யானை டாக்டரைக் கூட்டி வர பட்டணத்திற்குப் போகின்றது. தமிழில் உள்ள பெயர்ப் பலகையை வாசித்து வக்கீலின் வீட்டையும், டாக்டரின் வீட்டையும் பிரித்தறிந்து கொள்கின்றது. அது மனிதனை விடப் புத்திசாலியாகக் காட்டப்படுகின்றது. இதுபோல்தான் நாயும், குதிரையும், பாம்பும், பசுமாடும் இவருடைய படங்களில் மனித அறிவைப் பெற்று விடுகின்றன.

ரசிகர்களின் பாராட்டும் அவற்றுக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு அறிவுக்குப் பொருந்தாத மிருகங்களின் சேஷ்டைகளைப் போலத்தான் அறிவுக்குப் பொருந்தாத மிகைப் படுத்தப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளும் தமிழ்ப்படங்களில் மிகுதியாக இடம் பெறுகின்றன. பராசக்தி முதல் பாசமலர் வரை, ஆலயமணி முதல் அபூர்வராகங்கள் வரை இத்தகைய சம்பவங்களின் குவியலாகவே அமைந்துள்ளன. இயக்குனர் திலகம் என்றெல்லாம் போற்றப்படும் பாலச்சந்தரின் அவள் ஒரு தொடர் கதைக் கதாநாயகியின் தமையன் ஏன் கொல்லப்பட வேண்டும்? கதாநாயகி கடைசியில் ஏன் தனது முதலாளியை மணந்து கொள்ள மறுக்க வேண்டும்? என்றெல்லாம் நாம் கேட்கக் கூடாது.

அவள் ஒரு தொடர் கதையாகவே இருக்க வேண்டும் என்றால் இவ்வாறெல்லாம் நடந்துதான் தீர வேண்டும். கதை பின்னுவதில் நமது தமிழ்ப்படக் கதாசிரியர்களை வெல்ல வல்லவர்கள் வேறெங்கும் இருக்க முடியாது. பொதுவாகக் கூறுவதானால் யதார்த்தம் என்பது தமிழ்ப்படம் அறியாத ஒன்றாகவே இன்னும் உள்ளது.

### 3) நட்சத்திர மதிப்பு

திரைப்படத்துறையில் நடிகர், நடிகையரின் அபரிதமான செல்வாக்கையே நட்சத்திர மதிப்பு என்பது குறிக்கின்றது. படக்கதையை விட, தயாரிப்பாளரை விட, டைரக்டரை விட நடிகர்கள் முதன்மை பெறுவது தமிழ்த்திரை உலகில் ஒரு சாபக் கேடாக அமைந்துள்ளது. தமிழ்த்திரைப்பட வரலாற்றில் இந்த நட்சத்திர மதிப்பு தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றது எனினும் சிவாஜி, எம்.ஜி.ஆர் ஆகிய இரு நடிகர்களின் "ஏகபோகக் கெடுபிடி வலுவடைந்த பிறகே தமிழ்த் திரைப்படம் அதிகம்" சீர்கேடு அடைந்தது எனலாம்.

ஏ. வி எம். தனது நூலில் பெரிய நடிகர்களின் கெடுபிடி பற்றி பின்வருமாறு விபரித்துக் கூறுகின்றார். "ஒரு பெரிய நடிகரை ஒரு படத்தயாரிப்பாளர் ஒப்பந்தம் செய்து கொள்கின்றார். காரணம் அந்தத் தயாரிப்பாளரிடம் படம் எடுப்பதற்குக் கொஞ்சம் பணம் இருக்கலாம் அல்லது பணம் இல்லாமலே கூட இருக்கலாம். அந்தத் தயாரிப்பாளர் உடனே என்ன செய்கிறார்? பல டிஸ்ரிபியூட்டர்களிடம் போகின்றார். டிஸ்ரிபியூட்டர்களும் பெரிய நடிகர்களுடைய படம்தான் வசூலாகும் என்று தெரிந்து பெரிய நடிகர்களைப் போட்டுப் படம் எடுத்தால்தான் புரடியூசருக்குப்பணம் கொடுக்க முன் வருகின்றார்"

ஏ. வி. எம். இன் இக்கூற்று பட உற்பத்தியில் பெரிய நடிகர்களின் ஆதிக்கத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது. கண்ணதாசன், எம். ஜி. ஆரின் உள்ளும் புறமும் என்ற தலைப்பில் எழுதிய ஒரு புத்தகத்திலே எம். ஜி. ஆரின் நட்சத்திர ஆதிக்கம் பற்றி விரிவாகக் கூறுகின்றார். தமிழ்ப் படத்தைப் பொறுத்த வரை காதல், வீரம், சோகம், நகைச்சுவை, இனக்கவர்ச்சி முதலிய பண்புகள் சில குறிப்பிட்ட நடிகர் நடிகைகளுடன் இணைந்தே பார்க்கப்படுகின்றன. கடைசியில் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பயன்படுத்துவதற்காகக் கூட ஒரு படம் தயாரிக்கப்படுகின்றது.

திரைப்பட உற்பத்தியில் மட்டுமன்றி ரசனையிலும் நட்சத்திர மதிப்பின் செல்வாக்கை நாம் காண்கிறோம். உலகில் வேறு எந்த நாட்டு நடிகர்களும், கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு தனித்தனி நடிகர்களுக்கான ரசிகர் மன்றங்கள் 'தமிழ் கூறும் நல்லுலகம்" முழுவதும் பரவி உள்ளன.

இந்திப்பட உலகிலும் நட்சத்திர மதிப்பு, நிலைகொண்டுள்ளது எனினும் தமிழ் நட்சத்திர மதிப்பு ஆழமான சமூகச் செல்வாக்கையும் கொண்டுள்ளது. ஜெயகாந்தன் எழுதிய 'சினிமாவுக்குப் போன சித்தாளு' நாவல் நட்சத்திர மதிப்பினால் ஏற்படும் சமுதாயச் சீரழிவுகளையே சித்தரிக்கின்றது. தமிழ்த் திரைப்படத்தின் தப்பிச் செல்லும் பண்பு, மிகைப் படுத்தும் பண்பு ஆகியவற்றுக்கும் நட்சத்திர மதிப்புக்கும் இடையே ஓர் உறவு இருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

ஒரு தீவிரமான சினிமா ரசிகன், தனக்குப் பிடித்தமான நடிகன் அல்லது நடிகை பற்றிய கனவிலும் கற்பனையிலும் யதார்த்த வாழ்வை மறக்க முயல்கிறான். நாலு இளைஞர்கள் சேரும் ஒரு கூட்டத்தில் யாராவது ஒரு நடிகன் அல்லது நடிகை பற்றிய உரையாடல் ஒன்றும் இடம் பெறுவது இன்று சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. நடிகர் வழிபாடும் நடிகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியத் திரைப்படத் தொழிலின் கேந்திரமாக உள்ள தமிழ்நாட்டுத் திரைப்பட முதலாளிகள் கோடிக்கணக்கான தமிழ் மக்களை ஒரு கனவுலக மாயையில் மூழ்கடித்து தங்கள் பணப்பைகளை நிரப்பிக் கொள்ளும் முயற்சியிலேயே விடாப்பிடியாக உள்ளார்கள். ஆங்காங்கே தோன்றும் புதிய கலையாற்றல்கள் இவர்களின் ஏகபோக நிறுவனங்களின் வலிமையால் அழிந்து விடுகின்றன. நாற்பது வருடத் தமிழ் சினிமா வரலாற்றில் அத்தி பூத்தாற் போல் தோன்றிய "உன்னைப் போல் ஒருவன், தாகம், அக்கிரகாரத்தில் கழுதை" முதலிய தரமான கலைப்படைப்புகள் இவ்வாறே நசுக்கப்பட்டன.

தமிழ் சினிமா முற்றிலும் லாப மீட்டும் ஒரு தொழில் முயற்சியாகவே உள்ளது. பணம் சம்பாதிக்க உதவும் ஒரு பொழுது போக்குச்சாதனமாக மட்டுமே சினிமாவைத் தமிழ்ப்பட முதலாளிகள் கருதுகின்றார்கள். சமீபத்தில் வெளியான பிரபலதமிழ்ப் படத்தயாரிப்பாளரான ஏ.வி. மெய்யப்பச் செட்டியாரின் 'எனது வாழ்க்கை அனுபவங்கள்'' என்ற நூலில் (கடந்த 40 வருட கால தமிழ்ப்பட வளர்ச்சி பற்றிய சில சுவையான தகவல்கள் அந்நூலில் உள்ளன.) அவர் 'ரஷ்யர்கள் நம்மைப் போல் சினிமா ஒரு எண்டட்டைன்மன்ற் மீடியமாக [அதாவது பொழுது போக்குச் சாதனமாக] கருதுவதில்லை' என்று வெளிப்படையாகவே கூறியுள்ளார். இவ்வகையில் தமிழ்ப்பட முதலாளிகள் தமிழ்த் திரைப்படத்தை முற்றிலும் ஒரு லாப மீட்டித்தரும் பொழுது போக்குச் சாதனமாகவே கருதுகின்றார்கள் என்பது தெளிவு. இதன் அடிப்படையில் தமிழ்த் திரைப்படம் தனக்கே உரிய சில பண்புகளைக் கொண்டுள்ளது.

2,

வர்த்தக ரீதியான லாபநோக்கே தமிழ்த் திரைப்படத்தின் இப் பண்புக் கூறுகளை நிர்ணயிக்கின்றது. தமிழ்த் திரைப்படத்தின் சில விசேட பண்புக் கூறுகளை நாம் பின் வருமாறு பகுத்துக் கூறலாம்.

*1) நடைமுறை வாழ்வில் இருந்து தப்பிச்செல்வது தமிழ்ப் படத்தின் ஒரு பிரதான பண்பாகும்.*

உண்மையான சமூக வாழ்வையும், உண்மையான சமூகப் பிரச்சினைகளையும் சித்தரிப்பதற்குப் பதிலாக ஒரு கற்பனை உலகையும் ஒரு போலிக் கற்பனை வாழ்வையும் சித்தரித்துக் காட்டுவதன் மூலம், நடைமுறைப் பிரச்சினைகளில் இருந்து தற்காலிகமாகவேனும் தப்பிச் செல்வதற்குரிய ஒரு பொழுது போக்கு லாகிரிப் பொருளாக தென்இந்திய தமிழ் சினிமா பயன்படுவதையே இது குறிக்கின்றது.

தமிழ்ப்பட வரலாற்றில் காலத்துக்குக் காலம் தப்பிச் செல்லும் தன்மையில், மாற்றங்களைக் காணும் போதிலும் தப்பிச் செல்லும் பண்பு என்பது நிரந்தரமாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். ஆரம்ப காலத் தமிழ்ப் படங்களில் புராண இதிகாச அற்புதக் கற்பனைக் கதைகளே இடம் பெற்றன. ஹரிதாஸ், சிறீவள்ளி, பாதாள பைரவி, வேதாள உலகம், ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி போன்ற படங்கள் இத்தகையன. தமிழ் சினிமா தன் முளையிலேயே கற்பனை உலகைத் தன் களமாகக் கொண்டிருந்தமைக்கு இவை சில உதாரணங்கள் மட்டுமே. 1950ம் ஆண்டுகளில் இராசாராணிக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட ஏராளமான படங்கள் தயாரிக்கப்பட்டன.

வாள் வீச்சும், குதிரை ஓட்டமும், கனல் கக்கும் வசனங்களும், வில்லன் களிடமிருந்து காதலிகளை மீட்டெடுப்பதும் இவற்றின் இவற்றின் உயிர்நாடியாக அமைந்தன. பராசக்தி, வேலைக்காரி போன்ற சமூக சீர்திருத்தக் கதைப்படங்கள் சில சில இக் காலப் பகுதிகளில் வெளிவந்த போதிலும் அவை விதிவிலக்கான சிறுபான்மை முயற்சிகளேயாகும். சமகாலப் படங்கள் பெரும்பாலும் சமூகக் கதைகளைக் கொண்டிருப்பினும் உண்மையான தமிழ்நாட்டுச் சமூக வாழ்வுக்கும், அவற்றுக்கும் இடையே சிறிதும் சம்பந்தமில்லை என்பது வெளிப்படை. கருத்து ரூபப்படுத்தப்பட்ட கற்பனையான ஒரு யதார்த்தப் போலியையே நாம் இப்படங்களில் காண்கின்றோம். பாலச்சந்தர், பாரதிராஜா, பாக்கியராஜா போன்றவர்கள் தமிழ் படத்தில் புதிய மாற்றங்கயையும் சாதனைகளையும் கொண்டு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இது ஒரு பொய்மையே ஆகும். இவர்களும் போலி யதார்த்தத்தையே தம் படங்களில் காட்டுகின்றனர். நகரமயப்பட்ட சமூக மனப்பான்மைக்கு இவர்கள் தீனி போடுகின்றனர்.

பொது சனங்களின் சமய உணர்வைப் பயன்படுத்தி தெய்வங்களைக் காட்சிப் பொருளாக்கி பணம் சம்பாதிக்க முயன்ற சமீப காலத்துப் பக்திப்பட முயற்சிகளும் தமிழ்படத்தின் தப்பிச் செல்லும் பண்புக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

*(2) தமிழ்ப்படத்தின் பிறிதொரு முக்கியப் பண்பு மிகைப்படுத்தலாகும்*

இது தமிழ்த் திரைப்படத்தின் தப்பிச் செல்லும் பண்புடன் மிக நெருங்கிய உறவுடையது. இயற்கைக்கு மாறான மிகைப்படுத்தப்பட்ட கதைப் பின்னலும் சம்பவங்களும், குண சித்திரமும், நடிப்பும் தமிழ்த்திரைப்படத்தின் முக்கிய இயல்பாக உள்ளது. அன்பு, பாசம், தியாகம், ஒழுக்கம், காதல், கடமைகள் எப்பொழுதும் மிகைப்படுத்தப்பட்டதாகவே சித்தரிக்கப்படுகின்றன. பணமா பாசமா? உயிரா மானமா? காதலா கடமையா? கல்வியா செல்வமா? போன்ற வினாக்கள் தமிழ்ப்படங்களில் அடிக்கடி எழுப்பப்படுகின்றன. ஒன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்காகவே படம் பார்த்தலும் இயல்பான நிலைமையாகி விட்டது. நடிகர் வழிபாடும் நடிகர்களுக்காகவே படம் பார்த்தலும் இயல்பான நிலைமையாகி விட்டது. நட்சத்திர மதிப்பு சினிமாவைத்தாண்டி, சமூக கலாச்சார வாழ்வைத் தாண்டி அரசியலிலும் ஆழமாக வேரூன்றி இருப்பதை அண்மைய தமிழ்நாட்டுத்தேர்தல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. சினிமாவைப் போலவே அரசியலிலும் எம்'ஜி.ஆர். தன்னிகர் இல்லாத் தலைவனாக உருவாகுவதற்கு இந்நட்சத்திர மதிப்பின் செல்வாக்கே பிரதான காரணமாக அமைந்துள்ளது என இந்திய அரசியல் அவதானிகள் ஒத்த கருத்தைத் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அண்மையில் வெளிவந்த கணையாழி சஞ்சிகையில் (ஏப்ரல் 77) என். எஸ். ஜகன்னாதன் என்னும் அரசியல் விமர்சகர் எழுதியுள்ள பந்தியை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும். அவர் பின் வருமாறு எழுதுகின்றார்.

"எம்.ஜி.ஆர் தோல்வியே அறியாத ஒரு வெகு ஜனவீரன். கால கட்டங்களை எல்லாம் கடந்த ஒரு கற்பனை உலகில் ஒரே சமயத்தில் அரசிளங்குமரனாகவும், ரிக்ஷாக்காரனாகவும், மலைக்கள்ளனாகவும், புரட்சி வீரனாகவும், கத்திச்சண்டைச் சூரனாகவும், மேற்குடி மக்களை எதிர்த்துப் போரிடும் கீழ்க்குடி மக்களின் பிரதிநிதியாகவும், பணத்திமிர் பிடித்த முதலாளியின் மகளை காதலில் வெல்பவனாகவும் மக்கள் மனதில் எம்.ஜி.யார் உலவுகின்றார். இப்படி பஹுரூபியாக இயங்கும் போது தனது பக்தர்களுக்கு ஒரு நிறைவற்ற கனவுலகத்தை அமைத்துக் கொடுத்து யதார்த்த வாழ்வில் எழும் ஏமாற்றங்களுக்கு மாற்றமளிக்கின்றார். இந்த சொப்பன உலகத்தில் புரட்சிக் கனலும் (நிகழ்காலத்தியது) சாம்ராஜ்ய மாட்சியும் (பண்டைக் காலத்தியது) முரணில்லாமல் சேர்ந்திருக்க முடியும். ராஜ ராஜ சோழனும் ரிக்ஷாக்கார முனுசாமியும் சரிநிகர் சமானமானவர்களாய் வாழமுடியும்" ஜகன்னாதனின் இப்பந்தி தமிழ்ச் சினிமாவின் இயல்பையும் நட்சத்திர மதிப்பின் தன்மையையும் இரத்தினச் சுருக்கமாக தெளிவு படுத்துகின்றது.

## 4) தமிழ்த் திரைப்படத்தின் பிறிதொரு முக்கியப் பண்பு பட்டியல் முறையாகும்.

சில குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்ந்து எல்லாப் படங்களிலும் இடம் பெறுவதையே பட்டியல் முறை என்பது குறிக்கும். வழக்கமான அம்சங்கள் கொண்ட தமிழ்ப் படம் என்னும் போது நாம் இதையே கருதுகின்றோம். காதல், சோகம், சண்டை, நகைச்சுவை, பாட்டு, நடனம் போன்றவை எல்லாத் தமிழ்ப்படத்துக்கும் பொதுவானதாகும். முன்பாதி இன்பியலாகவும், பின்பாதி துன்பியலாகவும் அமைவது தமிழ்ப்படங்களின் ஒரு பொது விதியாகும். இவற்றில் மிகச் சில விதிவிலக்குகள் இருக்கலாம். எனினும் அவை பொருட்படுத்தத்தக்கன அல்ல.

ஒரு படத்தில் நீச்சல் உடைக்காட்சியில் ஒரு நடிகை தோன்றினால் தொடர்ந்தும் அத்தகைய காட்சிகள் பல படங்களில் இடம் பெறுவதை நாம் காணலாம். ஒரு படத்தின் கதைப் பொருளோடு சம்பந்தமில்லாத அல்லது அதற்கு அவசியமில்லா நிகழ்ச்சிகள் பட்டியல் முறையை அனுசரித்து எல்லாத் தமிழ்ப் படங்களிலும் இடம் பெறுகின்றன. இலாப நோக்கே இதன் அடிப்படையாகும். ஒரு தயாரிப்பாளர் என்ற வகையில் ஏ.வி.எம் இதைத் தெளிவாகப் பின்வருமாறு கூறுகின்றார்.

"வெளி நாடுகளில் பாட்டுக்காக ஒரு படம் எடுப்பார்கள். கதைக்காகவே ஒரு படம் எடுப்பார்கள். காமெடிக்காகவே ஒரு படம் எடுப்பார்கள். அவைகளுக்குத் தனித்தனியாகவே கூட்டம் வரும். நம்முடைய தேசத்தில் ஒரு சினிமாவை ஒருவர் 10 தடவைகள் கூடப் பார்ப்பதுண்டு என்று கேள்விப்படும் போது வெளிநாட்டாருக்கு ஆச்சரியமாக இருக்கின்றது, அவர்களுக்கு இங்கே உள்ள நிலைமை தெரியாது. பாட்டு. நகைச்சுவை, காதல், நல்ல கதை ஆகிய எல்லா அம்சங்களும் நிறைந்த படங்களாக இருந்தால் தான் இங்கே ஜனங்கள் ஒரு படத்தை பலமுறை பார்க்கின்றார்கள். அப்படி ஒரு படத்தை அநேக முறை அவர்கள் பார்த்தால்தான் நமக்குள்ள சின்ன மார்கெட்டில், நாம் போட்ட முதலுக்கு ஏற்றபடி லாபம் வரும்".

ஏ. வி. எம். இன் இக்கூற்று பட்டியல் முறையின் அடிப்படையை நன்கு விளக்குகின்றது. தமிழில் வந்த 'வாழ்க்கை' படத்தை அவர் இந்தியில் எடுத்தது பற்றிக் கூறுகையில் அவர் குறிப்பிடும் ஒரு நிகழ்ச்சி இதை மேலும் உறுதிப்படுத்துகின்றது. அவர் எழுதுகின்றார்.

"வேதாள உலகம் படத்தில் லலிதா பத்மினி பாம்பாட்டி நடனக்காட்சியைச் சேர்த்தேன் என்று சொன்னேனே; அதே பாம்பாட்டி நடனக் காட்சியை எப்படியாவது இந்தி 'பஜாரில், (வாழ்க்கை) சேர்த்துவிட வேண்டும். அதை வட நாட்டவர்களும் ரசிப்பார்கள் என்று தோன்றிற்று. ஆகவே அந்த நடனக் காட்சியையும் இந்தி பஜாரில் புகுத்தினேன். இந்தப் படம் டெல்லியில் ரிலீசானவுடன் வைஜயந்திமாலா கிராமியப் பாம்பாட்டி நடனம் வரும் போது நம் ஊர்களில் வழக்கம் இல்லை, வடக்கத்திய வழக்கப்படி அவ்விடத்து ஜனங்கள் மிக உற்சாகமாக நான்கணா, எட்டணா என்று காசுகளை மேடையை நோக்கி தூக்கி எறிந்தார்கள்."

ஏ. வி. எம். இன் இக்கூற்று, மக்களின் ரசனை என்ற பேரில் இலாப நோக்கத்திற்காக எவ்வாறு காட்சிகள் சேர்க்கப்படுகின்றன என்பதற்குச் சிறந்த உதாரணமாகும். தமிழ்ப் படம் தானே வளர்த்தெடுத்த ஒரு போலி ரசனைக்குத் தீனி போடுவதற்காக அமைத்துக் கொண்ட ஒரு வர்த்தகத் தந்திரமாகவே இப்பட்டியல் முறை அமைந்துள்ளது. இது தொடர்பாக கண்ணதாசன் கூறும் ஒரு செய்தியும் கவனிக்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தக்கது. தனது மாலையிட்ட மங்கை படத்தைத் தோல்வி யுறச் செய்வதற்கு எம். ஜி. ஆர் ஒரு சதி செய்ததாகவும், அவரது சதியை முறியடித்து தி. மு. க. ஆதரவாளர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே தான் அப்படத்தில் 'திராவிடப் பொன்னாடே, என்று தொடங்கும் பாடலை எழுதிச் சேர்த்த தாகவும் அந்தப் பாடலுக்காகவே அப்படம் வெகுவாக ஓடிய தாகவும், கண்ணதாசன் எம். ஜி. ஆர் பற்றிய தனது நூலிலே கூறுகின்றார். (எம். ஜி. ஆரின் உள்ளும் புறமும்–1977–பக் 29) திரைப்படத்தின் மையப்பொருளோடு சம்பந்தப்படாத விசய மெல்லாம் வெவ்வேறு தேவைகளுக்காக எவ்வாறு சேர்க்கப் படுகின்றது என்பதை இச்செய்தி நன்கு தெளிவுபடுத்து கின்றது. பட்டியல் முறையின் அடிப்படை இதுதான்.

## 3

பொதுப்படையாக, தமிழ்த் திரைப்படத்தின் நான்கு முக்கிய பண்புகள் பற்றி இதுவரை நோக்கினோம். இப்பொதுப் பண்பு கள் யாவும் போலியான ரசனை முறை ஒன்றை உருவாக்கி வளர்த்துள்ளன. யதார்த்த வாழ்வுக்குப் புறம்பான போலி யான சினிமாக் கலாச்சாரம் ஒன்றையும் தோற்றுவித்துள்ளன. நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளில் இருந்து பெரும் பாலான மக்களின் கவனத்தைத் திசை திருப்பியுள்ளன. இதனாலேயே "தமிழ் சினிமா, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் கலாச்சாரப் படுகொலை" என்று லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மிகச் சரியாக வர்ணித்தார்.

இலங்கை நீண்ட காலமாக தமிழ்த் திரைப்படத்திற்கு ஒரு வாய்ப்பான சந்தையாக இருந்து வருகின்றது. அந்த வகை யில் இதன் செல்வாக்கு இங்கு பல துறைகளிலும் ஊடுருவி இருப்பதை நாம் காண்கின்றோம். ஈழத்துச் சினிமா, நமது கலை இலக்கியம், பத்திரிகை, வானொலி ஆகியவற்றிலே தமிழ்த் திரைப்படத்தின் வலிமையான பிடியை நாம் இங்கு அனுபவிக்கின்றோம்.

மேலோட்டமான, போலியான, தப்பிச் செல்லும் ஒரு பொது சன ரசனை முறையை வளர்த்தெடுப்பதில் தமிழ்த் திரைப் படம் இங்கு பெரும் பாங்காற்றியுள்ளது என்பதில் ஐயம் இல்லை. தமிழ் சினிமா ரசனை என்பது தரம் குறைந்த ரசனைக்கு ஒரு இலக்கணமாக அமைந்துள்ளது. ரசனை என்பது பயிற்சியின் பாற்பட்டதேயாகும். நீண்ட காலமாக ஒரே விதமான ரசனை முறைக்குப் பழக்கப்பட்ட மக்கள் அதிலேயே ஆழ்ந்து விடுகிறார்கள். நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளில் இருந்து தப்பிச் செல்வதற்கு இந்தப் போலி ரசனைமுறை அவர்களுக்கு ஒரு வாய்ப்பாகவும் அமைந்து விடுகின்றது.

தமிழ்க் கலா ரசிகர்களைப் பொறுத்தவரை உயர்ந்த ரசனைக் கும் மட்டமான ரசனைக்குமிடையே ஒரு நீண்ட இடைவெளி இருப்பதை நாம் அவதானிக்கலாம். உயர்ந்த ரசனை என் பதன் மூலம் கலை இலக்கியங்களின் ஊடாக வாழ்க்கையை அதன் உண்மையான தோற்றத்தில் விளங்கிக் கொள்வதற் குரிய ஆர்வத்தையே குறிக்கின்றேன். இத்தகைய ரசனை முறை இலக்கிய ஆர்வமும் ஆய்வறிவுத்துறையில் ஈடுபாடும் கொண்ட கற்றறிந்த சிறுபான்மையினருக்குரியதாகவே உள் ளது. லெஸ்டர் பீரிஸ், சத்தியஜித்ராய், அக்றாகுரோசாவா போன்ற உயர் கலைஞர்களின் திரைப்படைப்புகளை நம் மத்தியில் இத்தகைய சிறுபான்மையினரே விரும்பிப்பார்த்துப் புதியதொரு கலை அனுபவத்தைப் பெறுகின்றார்கள்.

இதற்குப் பதிலாக மட்டமான ரசனை என்பது தப்பிச் செல்ல உதவும் பொழுது போக்கு அம்சங்களில் உள்ள விருப் பத்தைக் குறிக்கும். இத்தகைய ரசனை, இங்கு பெரும் பாலான பொதுமக்களுக்கும், படித்த இளைஞர்கள், மத்திய தரவர்க்கத்தவர் ஆகியோரில் பெரும்பாலோருக்கும் உரிய தாக உள்ளது. எம்.ஜி யாரின் படத்தை முதல் காட்சி யிலேயே பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்தில் சனநெரிசலில் மூர்ச்சித்து இறந்தவர்கள் பற்றிய செய்திகளை நாம் கேள்வி பட்டுள்ளோம். இரண்டு மணிக்காட்சிக்குக் காலை எட்டு மணிக்கும், ஆறு மணிக் காட்சிக்கு பகல் இரண்டுமணிக்கும் கியூவில் சனங்கள் நிற்பதை நாம் பார்க்கின்றோம். ரசனை யில் இவ்வளவு பெரிய இடைவெளி உருவாவதற்கு தமிழ் சினிமா தொடர்ந்தும் காரணமாக இருந்து வந்துள்ளது. இலக்கியத்திலும் இதன் விளைவை நாம் காண்கிறோம். பாலியல் அம்சங்கள் மிகுந்த 'பட்லி' பல ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கு விருந்தாக உள்ளது. ஆனால் அதேவேளை சமூகப் பிரச்சினைகளை அலசும் ஒரு காத்திரமான நாவலின் ஆயிரம் பிரதிகள் விற்பதற்கே படாதபாடு படவேண்டியுள்ளது.

திரைப்பட ரசனையில் மட்டுமன்றி, திரைப்பட உற்பத்தி யிலும் தென் இந்திய தமிழ் சினிமாவின் செல்வாக்கையே நாம் இங்கு காண்கின்றோம். ஈழத்து சினிமா என்பது கடந்து பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை சிங்கள சினிமா வாகவே இருந்தது 1947ம் ஆண்டு, முதல் சிங்களத் திரைப் படம் இங்கு திரையிடப்பட்டது. தமிழ்ப்படம் தான் சிங்களப் படத்தின் தொட்டிலாகவும் வளர்ப்புத் தாயாகவும் அமைந் தது. ஆரம்பகாலச் சிங்களப்படங்கள் பெரும்பாலும் தென் இந்தியாவிலேயே படமாக்கப்பட்டன. தென்இந்திய முறை களையே இவை பின்பற்றின. சிங்களப்படங்களுக்கும் தமிழ்ப்படங்களும் பெயரையும் மொழியையும் தவிர வேறு வித்தியாசங்கள் இருக்கவில்லை.

ஆயினும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வருகையின் பின்னர், சிங்கள உயர் திரைக் கலைஞர்களின் இடையறாத போராட் டங்களின் பின்னர், சிங்களத் திரைப்படத்தின் ஒரு பகுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்ப்படத்தின் பட்டியல் முறையில் இருந்து முற்றாகத் தன் உறவை முறித்துக்கொண்டு சர்வதேச உயர் சினிமாக் கலை மரபுடன் தன்னையும் இணைத்துக்கொண்டது. இன்று உயர்கலை நெறிக்குச் சிங்கள மக்கள் பயிற்றப் பட்டு விட்டார்கள். பெருமளவான உயர் கலை மரபுச் சிங்களப்படங்கள் இன்று நஷ்டம் இல்லாமல் வெற்றிகரமாக ஓடுகின்றன.

இலங்கைத் தமிழ்ப்படத்தைப் பொறுத்த வரை நிலைமை முற்றிலும் வேறுபட்டது. தென் இந்தியத் தமிழ்ப்பட ரசனையின் ஆளுகைக்கு அடிபட்ட சினிமாக் கலைஞர்களும் தயாரிப்பாளர்களுமே இங்கு பட உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள். அவர்கள் தயாரிக்கும் படங்கள் தென் இந்தியத் தமிழ்ப் படங்களின் ஒரு போலிப் பிரதியாகவே காணப்படுகின்றன. 'பொன்மணி' இதற்கு ஒரு புறநடை எனினும் இப்போது தயாரிப்பில் உள்ள தமிழ்ப் படங்களும் இதே பட்டியல் முறைப் பாணியிலேயே தயாரிக்கப் படுவதாகத் தெரிய வருகின்றது. அத்தகைய தயாரிப்புகளே பணம் சம்பாதித்துத் தர முடியும் என்றும் கூறப்படுகின்றது. சமீப காலமாக இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பு என்ற பெயரில் வழக்கமான தமிழ்ப்படங்களையே இங்கு தயாரிக்க முயல்கின்றார்கள். இது ஒரு வகையில் பொருளாதார கலாசாரச்சுரண்டலாகவும் அமைகின்றது. இந்தியத் தமிழ்ப்படங்களை இலங்கையில் தயாரிப்பதால் நமக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.

தென் இந்தியத் தமிழ்ப்படம் உருவாக்கியுள்ள சினிமாக் கலாச்சாரத்துக்கும் போலி ரசனைக்கும் பத்திரிகைகளும் வானொலியும் இங்கு உரமிட்டு வளர்க்கின்றன. இலங்கை வானொலியின் சேவை இரண்டு மலினமான ஒரு சினிமாக் கலாச்சாரத்தை வளர்ப்பதையே தனது குறிக்கோளாகக்கொண்டிருப்பது போல் தோன்றுகின்றது. காலை முதல் மாலை வரை தமிழ் சினிமாவையே அது தனது தளமாகக் கொண்டுள்ளது. சினிமாப் பாணியிலான சிந்தனை முறை ஒன்றையும், எழுத்து முறை ஒன்றையும் அது மாணவர்களிடையே வளர்க்க முனைகின்றது.

சுருக்கமாகச் சொல்வதெனின் கலைரசனை, வாழ்க்கை நோக்கு, கலாசார உணர்வு, ஆக்குதிறன் பொதுத் தொடர்புச் சாதனங்கள் முதலிய அனைத்திலும் தென் இந்தியத் தமிழ்த் திரைப்படத்தின் செல்வாக்கு இங்கு வலுப்பெற்று இருப்பதை நாம் மறுக்க முடியாது.

## 4

இத்தகைய சினிமாச் சூழ்நிலையிலேயே நாம் தேசிய சினிமா பற்றிச் சிந்திக்கவேண்டியுள்ளது. தேசிய சினிமா என்பது சுதேச மக்களின் வாழ்க்கை நிலைமை, பிரச்சினைகள், பண்பாட்டு அம்சங்கள்,எதிர்ப் பார்ப்புகள் ஆகியவற்றை அவர்கள் வாழும் சூழ்நிலையில் இயல்பு குன்றாமல் சித்தரிக்கும் திரைப் படங்களையே குறிக்கும். இத்தகைய அம்சங்களைக் கொண்ட தேசிய சினிமா என்பது தென்னிந்திய தமிழ்த் திரைப்பட உலகில் காணப்படாத ஒன்று என்பது இதுவரை நாம் நோக்கியதில் இருந்து தெளிவாகும். இந்தியாவில் மலையாளம், வங்காளம், கன்னடம் மொழிச் சமூகங்கள் தமக்கே உரிய தேசிய சினிமாவை உருவாக்கிக் கொண்டுள்ளன. அது போல் இலங்கையில் சிங்களத் திரையுலகும் தனக்குரிய தேசிய சினிமா மரபு ஒன்றினை உருவாக்கியுள்ளது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் முயற்சிகளைத் தொடர்ந்து, சிறிகுணசிங்க, நிகால்சிங்க, மககமசேகர, டைற்றஸ் தொட்டவத்த, கருணாசேன பத்திராஜா, வசந்தா ஒபயசேகா, தர்மசீர்பண்டார நாயக்க, சுனில் ஆரியரத்தின போன்றவர்கள் சிங்கள தேசிய சினிமா ஒன்றை உருவாக்க உழைத்த திரைப்பட நெறியாளர்களுள் விதந்து குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது திரைப்படங்கள் மூலம் சிங்களமக்களின் வாழ்வும் அவர்களது பிரச்சினைகளும் அவர்களது பண்பாட்டுப் பின்னணியில் திரையிலே கலைப் படைப்புக்களாக வெளிவந்துள்ளன. இவர்களுட் சிலர் சர்வதேசத் திரைப்படவிழாக்களில் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றுள்ளனர். இவர்களது படங்களுடன் தமிழ்ப்படங்களை ஒப்பிடுகையில் அவை தொழில் நுட்ப ரீதியில் எவ்வளவு தான் முன்னேற்றம் பெற்றிருப்பினும் கலை என்ற முறையில் மிகக் கீழ் நிலையிலேயே இருப்பதைக் காணலாம்.

இலங்கையிலே இதுவரை சுமார் இருபது தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலனவை தென் இந்தியத் தமிழ்ப்படங்களின் போலிப் பிரதிகளே. பல குறைபாடுகள் இருப்பினும் குத்துவிளக்கு, வாடைக்காற்று, பொன்மணி ஆகியவையே இவற்றுள் தேசிய திரைப்படம் என்ற பிரிவுள் வரத்தக்கன. எனினும் தேசிய திரைப்படத்தின் பல்வேறு அம்சங்களையும் கருத்தில் கொண்டு நோக்கினால் பொன்மணி ஒன்றை மட்டுமே இதுவரை தயாரிக்கப்பட்ட ஈழத்துத் தேசிய தமிழ்த் திரைப்படம் என்று துணிந்து கூறலாம். (இதை நெறிபடுத்திய பத்திராஜா ஒரு சிங்களவர் என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது) ஆயினும் வருமான நோக்கில் இவையெல்லாம் தோல்வி முயற்சிகளே இவை மட்டுமன்றி வழக்கமான பாணியைப் பின்பற்றி இங்கு தயாரிக்கப்பட்ட படங்கள் கூட பெரும்பாலும் வர்த்தக ரீதியிலும் தோல்வி முயற்சிகளே. இலங்கைத் தமிழ்ப் படங்களின் தோல்விக்கு அடிப்படைக் காரணம் தென்னிந்தியத் தமிழ்ப் படங்களின் செல்வாக்கேயாகும். வழக்கமான பாணியில் இங்கு தயாரிக்கப்பட்ட படங்கள் தோல்வியடைந்தமைக்கு, அவை தமிழ் நாட்டுப் படங்களின் மட்டமான போலிப் பிரதியீடுகளாக அமைந்தமையே காரணமாயிற்று. அசலுக்கும் நகலுக்கும் இடையே இருந்த வேறுபாடு நமது படங்களில் துலக்கமாகத் தெரிந்ததால் அவை தமிழ் நாட்டு அசலுக்கு ஈடு கொடுக்க முடியாயல் பரிதாபமாகத் தோல்வியடைந்தன. வழக்கமான பானியை நிராகரித்து உயர்கலை மரபில் எடுக்

கப்பட்ட பொன்மணி தோல்வியடைந்தமைக்கான பிரதான காரணம் தமிழ்நாட்டுப் படங்கள் இங்கு பயிற்றி வளர்த்துள்ள சினிமா ரசனை முறைக்குள் பொருந்திவராமல் அது அந்நியப்பட்டுப் போனதேயாகும். எவ்வகையிலும் தென்இந்தியத் தமிழ்ப் படங்களே நமது படங்களின் தோல்விக்கு அடிப்படைக் காரணியாக அமைக்துள்ளன.

இந்த உண்மையைப் புரிந்து கொண்ட இலங்கைத் தயாரிப்பாளர் சிலர் கூட்டுத் தயாரிப்பு என்ற பெயரில் இந்தியத் தமிழ்ப் படங்களை இப்போது இலங்கையில் தயாரிக்கத் தொடங்கியுள்ளனர். பிரபல இந்திய நடிகர்களுக்கு முதலிடம் கொடுத்துத் தயாரிக்கப்படும் இப்படங்கள் எவ்வகையிலும் நமது தேசியப் படங்களாக உருவாகும் வாய்ப்பு இல்லை. அவை முற்றிலும் தொழில் முயற்சியேயாகும். தவிரவும் தேசிய திரைப்பட உருவாக்கத்துக்கு இவை பாதகமாகவும் உள்ளன. இந்த ஆபத்தை உண்மையான கலையார்வம் உள்ள இலங்கைக் கலைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேசிய சினிமா மரபு ஒன்றினை உருவாக்குவதில் நமது சினிமா ரசிகர்களின் ஏற்புடைமை முக்கிய கவனத்துக்குரியது. தென் இந்திய தமிழ்ப்படங்களுக்கே பயிற்றப்பட்ட நமது ரசிகர்கள் திரைப்படம் பற்றிய ஒரு பொய்மையான உணர்வுச் சூழலுக்கு ஆட்பட்டுள்ளனர். யதார்த்தத்தை நிராகரிக்கும் — தப்பிச் செல்லும் ரசனை முறைக்கு அவர்கள் பயிற்றப்பட்டுள்ளார்கள். தாங்கள் அன்றாடம் காண்கின்ற இடங்கள், காட்சிகள்கூட திரைப்படத்தில் வருவதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. பொன்மணியில் யாழ்ப்பாணத்து முனியப்பர் கோயில் காட்டப்படும் போது விசில் அடிக்கிறார்கள். யாழ்ப்பாணத் தெருக்கள், கிராமப்புறங்கள் படத்தில் வரும் போது கேலிக் கூச்சல் போடுகின்றார்கள். இவையெல்லாம் திரையில் இடம்பெறத் தகுந்தவையல்ல என்ற ஒரு உள்ளுணர்வே இதற்குக் காரணம் எனலாம். பெரும்பாலும் தமிழ் நாட்டின் பொது யதார்த்தம் மறைக்கப்பட்ட மேல்மட்டக் காட்சிகளையே திரையில் கண்டு பழகியவர்களுக்கு தாங்கள் அன்றாடம் காணும் சூழலும், மொழியும், பாத்திரங்களும் திரையில் வரும்போது சற்று விரசமாக இருக்கின்றது. 1950ம் ஆண்டுகளில் ஈழத்திலே தேசிய இலக்கியம் உருவாகத் தொடங்கியபோது இலக்கிய ரசிகர்களிடையே நிலவிய மனப்பான்மையை இது ஒத்தது எனலாம். அதையெல்லாம் மீறி இன்று தேசிய இலக்கியம் வேரூன்றி விட்டது. தொடர்ந்த தாக்குதல்கள் மூலமே இது சாத்தியமாயிற்று. ரசனை ஒரு பழக்கமே. எனினும் தேசிய இலக்கியத்தைப்போல் தேசிய சினிமாவை உருவாக்குவது அவ்வளவு இலகுவல்ல. திரைப்படம் பெருந்தொகையான முதலீட்டோடு சம்பந்தப் பட்டது. முதலீட்டுக்கு உத்தரவாதம் இல்லாத பட்சத்தில் இத்தகைய முயற்சிகளில் யாரும் துணிந்து இறங்க மாட்டார்கள். இத்தகைய உத்தரவாதம் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் அரசு மட்டத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். திரைப்படக் கூட்டுத்தாபனம் இதில் உதவ முடியும். இத்தகைய உத்திரவாதம் கிடைத்தால்தான் தொழில் முயற்சியாக அன்றி கலை முயற்சியாகக் கருதுபவர்களும் திரைப்படத் துறையில் ஈடுபட முடியும். அவர்களது படைப்புக்களின் தொடர்ந்த தாக்குதல்களே ரசனையை மாற்ற முடியும். சிங்களத்திரை உலகில் இதுவே நடந்தது. ஆனால் இன ஒதுக்கல் மேலோங்கியுள்ள இன்றைய நிலையில் அரசு மட்டத்தில் இத்தகைய ஆதரவுகளை எதிர்பார்க்க முடியாது. ஆர்வம் கொண்டோரின் தனி முயற்சியாகவே இப்போதைக்கு எதுவும் நடைபெற முடியும்.

இதற்கு அனுசரணையாக ஒவ்வொரு பிரதேசத்திலும் திரைப்பட ஆர்வலர்கள் சேர்ந்து திரைப்படக் கழகங்களை உருவாக்க வேண்டும். உலகின் சிறந்த கலைப்படங்களை அவர்கள் தங்கள் அங்கத்தவர்களுக்காகத் திரையிட வேண்டும். அதை ஒட்டிய கருத்தரங்குகளும், ரசனைப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படவேண்டும். இத்தகைய சிறு முயற்சிகள் மூலம் காத்திரமான ரசிகர்களைக் கணிசமான அளவு உருவாக்க முடியும். இலங்கையில் தேசிய தமிழ் சினிமாவின் எழுச்சிக்கு இது ஒரு வழிமுறையாக அமையலாம்.

○ *யாழ்ப்பாணத்தில் சினிமா பற்றிய கருத்தரங்கு ஒன்றில் வாசிக்கப்பட்டது—1977.*

அன்னம் (இந்தியா)

*தவிர்க்கமுடியாமல் இம்முறையும் இரண்டு இரவல் தூண்டில்களை இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம்! புதுவருடத்தில் நிலைமை மாறும் என நம்புகிறோம்!!*

*- கடலோடிகள்.*



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவல் தூண்டில்

தொகுப்பு: கடலோடிகள்

✉: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
4600 Dortmund 1
Germany

☎: (0231) 13 66 33

புதிய **சந்தா**
( 6 மாதங்களுக்கு. தபாற்செலவு டன்)

ஜேர்மனி : 20,-டி.எம்
ஐரோப்பா : 22,-டி.எம்
ஏனைய நாடுகள் : 28,- டி.எம்

தபாற்கணக்கு இல. 308 07 468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தாவை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.

இத் தொகுப்பில் பிரசுரமாகும் கருத்துகள் யாவற்றுடனும் தொகுத்தவர்களுக்கு முழு உடன்பாடு இருக்க வேண்டுமென்பதில்லை.

## தேசிய சக்திகள் பற்றி தூண்டில் மீதான விமர்சனம்

தூண்டில் 41இல் "சமர் கூறுவது போல் புலிகள் தரகுமுதலாளித்துவ போக்குள்ளவை தானா என்பது ஆய்வுக்குரியது. ஏன் என்றால் அப்படியடித்து கூற இருக்கும் காரணங்களைப்போலவே இன்னும் சரியாக கூறுவதானால் அப்படியில்லையென அடித்து கூறவும் காரணங்கள் இருக்கின்றன. புலிகள் தமிழ் தரகுமுதலாளித்துவத்தின் போக்கை காட்டுவார்கள் என்றால் ஏன் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி போல இன்று விட்டுக்கொடுத்து சரணடையவில்லை? அவர்களுக்கு ஒரு தேசியவாதம் இருக்கின்றது". இதன்பின் "புலிகளிடம் இருக்கும் சிந்தனை முதலாளித்துவ தேசியவாதத்தில் எவ்வகைப்பட்டது என்று ஆராய்வது அது தரகுமுதலாளித்துவ வகைப்பட்டதா, தேசிய முதலாளித்துவ வகைப்பட்டதா என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை. நாம் இந்த இடத்தில் அவசரப்பட்டு தீர்வு சொல்லவிரும்பவில்லை". பின்னால் தொடர்ச்சியாக புலிகளையும் தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் ஒப்பிட்டு மதிப்பிடும் போது "அரசியல் நீரோட்டத்தையிட்டு அவநம்பிக்கையுடன் அணுகவைக்கின்றது. ஆயினும் இது அதுவாக முடியாது மாறமாட்டாது என அடித்து கூறமுடியாது". தொடர்ந்தும் "உன்டை அபிப்பிராயத்திலே புலிகள் தரகுமுதலாளித்துவவாதிகள் அல்ல என்பது கிளியர் தானே? இன்னுமில்லை அதாவது இன்றுவரை அவர்கள் அந்தப்பிடிக்குப்போகவில்லை. நாளை போகக்கூடும்" என்ர தூண்டிலின் கருத்துக்களை பார்ப்போமாயின் புலிகள் தரகுமுதலாளிகள் தானா என்பது ஆய்வுக்குரியது. புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்தின் எந்த வகையென ஆராய்வது தமிழ் தரகுமுதலாளித்துவமா? தேசியமுதலாளித்துவமா? இது தொடர்பாக அவசரமாக தீர்வு சொல்லவிரும்பவில்லை. மாறமாட்டாது என அடித்துச்சொல்ல முடியாது. இன்னும் இல்லையென்ர சொற்களுக்கூடாக தூண்டில் தரகு முதலாளிகள் என்பது ஆய்வுக்குட்பட்டதாகவும் இன்னும் நிராகரிக்காத தன்மையுடன் ஆய்வுடன் நிற்கின்றார்கள். மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்தில் எந்தவகையென ஆராய்வதும், அது தரகுமுதலாளித்துவ வகைப்பட்டதா? தேசியமுதலாளித்துவப்பட்டதா? என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இக்கட்டுரையில் தூண்டில் புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்திற்கு உட்பட்ட ஒரு பிரிவுவென மட்டும் கூறி அவர்கள் தேசிய முதலாளித்துவ பிரதிநிதிகளா? அல்லது தரகு முதலாளித்துவ பிரதிநிதிகளா? என்பதை விவாதத்திற்கு விட்டுவிடுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தூண்டில் 48இல் ''முதலாளித்துவ தேசியவாதம் போன்ற பதங்களை புலிகள் குறித்து பாவிக்கின்ற போது அவர்கள் (சமர்) மறுத்துரைக்கின்ற வேகத்தைப்பார்த்தால் தேசியவாதம் தொடர்பாக அவர்களுக்கும் ஒருவித தூய்மைவாத அபிப்பிராயம் இருப்பதாக படுகின்றது''. இது தொடர்பாக சமருக்கு தூய்மைவாதம் கிடையாது. முதலாளித்துவ தேசியவாதத்தில் தனக்கே உரிய சுரண்டும் இயல்பை சமர் மறுத்துவிடவில்லை. முதலாளித்துவ தேசியவாதத்தில் நீங்கள் குறிப்பிட்ட இரு பிரிவுகளும் ஒன்றாக ஒரு பிரச்சனையை கையாள முடியாது. இதில் தனித்தனியாக ஒவ்வொன்றும் தேசியப்போராட்டத்தை தனது நோக்கு நிலையில் நின்று போராட முற்படும் இரண்டும் தேசிய விடுதலைப்போராட்டத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்த முனையும். அதிலிருந்து மக்கள் மீதான ஒடுக்குமுறையும் மாறுபடும் தன்மையிருக்கும். இதில் புலிகள் எந்தப்பிரிவு என்பதிலிருந்தே எமது விவாதம். ''அன்று பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவம் புரட்சி செய்த போது அதிலிருந்த முற்போக்கு அம்சங்கள் பின் அவசியமற்றனவாகி விட்டன'' என்ற இக்கருத்து சரியானது. இதை மூன்றாம் உலக நாடுகளுக்கும் நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்காமல் இருக்கும் நாடுகளுடன் பொருத்துவது சரியானதா? இங்கு நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான சக்திகள் முற்போக்கை ஏன் பிரதிபலிக்க முடியாது. இப்படி உருவாகும் தேசிய முதலாளித்துவவாதிகள்; ஒரு பாட்டாளிவர்க்கம் போராட்டத்தில் முற்போக்காக இருந்தால் அன்றி, இன்றைய நிலையில் சாத்தியமா? இது தொடர்பாக கீழே ஆராய்வோம்.

''பிறவர்க்கங்களின் ஜனநாயக கோரிக்கைகள், பாட்டாளிவர்க்கப்புரட்சி என்பவை பற்றிய அச்சம்'' இவை கூட முன்னையது போல் முதலாளித்துவ தேசிய சக்திகள் முற்போக்காக இருக்க முடியாது எனக்காட்ட முன்னேடுக்கப்பட்ட விவாதமே. இக்கருத்து சோவியத்தின் சோசலிசப்புரட்சிக்குப்பின் பல நாடுகளில் இருந்தும் முதலாளித்துவ தேசிய சக்திகள் இணைந்து போராடியுள்ளனர். உ+ம்:- சீனா, நிக்கரக்குவா, பிலிப்பையின்ஸ், கம்பூச்சியா, வியட்நாம்.... இப்படி பல நாடுகளை காணலாம். தூண்டிலின் விவாதம் முற்போக்கைப்பற்றி தீர்மானிக்க ஒரு காரணமாக முழுமையாகப்பார்க்க முடியாது. ''அன்றைய தேசியவாதத்தலைவர் சன்யாட் சென்னை முதலாளித்துவ தேசியவாதத்தின் பிரதிநிதியாக கருதுகின்றது. சன்யாட்சென் இன்று இருந்தால் கூட அன்று இருந்தது போல் இருந்திருக்க முடியாது''. இதை நாம் ஒரு நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அதாவது ஒரு பாட்டாளிவர்க்கம் பலமான நிலையில், ஐக்கிய முன்னணிக்குள்ளோ, வேறு அமைப்பாகவோ சன்யாட்சென் போல ஒருவர் இருக்கமுடியும். சன்யாட்சென் இருந்தகாலம் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் பெரிதாக ஏற்படாத, தரகு முதலாளித்துவம் என்ற சக்தி ஆதிக்கம் பெரிதாக பெறாத காலம். இக்காலத்தில் முதலாளித்துவ தேசியவாதம் காலனியாதிக்கத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்ப்பதாகவிருந்தது. இன்று தரகுமுதலாளித்துவ ஆதிக்கத்துக்குள் முழுமையாக உட்பட்ட நிலையில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளில் ஆதிக்கத்தை நிகழ்த்தும் அளவிற்கு பலம் பெற்றுள்ளது. தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக உறுதியாக கருத்தை வைத்து உருவாகாத எந்த சக்தியும், தரகுமுதலாளித்துவத்தின் நேரடி, மறைமுக ஆதிக்கத்துக்குள் செல்வார்கள். இந்நாடுகளில் தேசியமுதலாளித்துவ பிரிவு எப்பொதும் உறுதியாக இருப்பதாயின், பாட்டாளிவர்க்கம் பலமான நிலையில் ஒரு ஸ்தாபன்மாக மட்டும் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். பாட்டாளிவர்க்க கட்சி பலமாகவில்லாத நிலையில் அங்க தேசிய முதலாளித்துவம், தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக குரல்கொடுக்கா முடியாதவகையில் தரகுமுதலாளித்துவத்துக்குள் உள் வாங்கப்பட்டு விடுவார்கள். இது எம்மண்ணில் உருவான அனைத்து இயக்கங்களையும் வைத்தே புரிந்து கொள்ள முடியும். தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக குரல் கொடுத்த சிறு இயக்கங்களான என்.எல்.எவ்.டி, பி.எல்.எவ்.டி, தீப்பொறி சோரம் போகாமல் இருந்ததும், சில இயக்கங்கள் இந்திய சார்பாகவும் (சோவியத்சார்பாகவும்) மாறியதுடன் புலிகள் மேற்கத்தைய சார்பாகவும் செயற்பட்டு வருவதை பார்க்க முடியும். ஒரு சுதந்திரமான தேசிய சக்தியென ஒன்றுமே இன்று எம்மண்ணில் இல்லை. ஆகத்தனிநபர்களாக மட்டுமே உள்ளனர். புலிகள் இன்று போராடும் தன்மையை ஏகாதிபத்தியம் தனது நலன் நோக்கி கையாளுவதே . இலங்கையிலுள்ள தேசிய இனமுரண்பாட்டில் எழும் போராட்டம் முற்போக்காக நகர்வை தடுக்கவும், ஒரு வர்க்கப்போராட்டம் உருவாகமல் தடுக்கவும், இந்தியாவின் ஆதிக்கத்தை தடுக்கவும், தென்னாசியாவின் உறுதித்தன்மையை தடுக்கவும்... மேற்கத்தைய ஏகாதிபத்தியம் முயலுகின்றது. இதில் இன்று பயன்படுத்தப்படும் சக்திகளில் புலிகளும் ஒன்று. இந்த நோக்கில் பயன்படுத்தப்படும் போது தமிழ்மக்களின் கோரிக்கையை கையில் எடுப்பது தவிர்க்க முடியாது. தமிழர் விடுதலை கூட்டணியினர் 1950முதல் ஒரு மத்திய தர இயக்கமாக வளர்ந்து அதன் வளர்ச்சியில் ஏகாதிபத்தியம் சார்ந்து சென்றதையும் இன்று நாம் பார்க்கின்றோம். இவர்களை அம்பலப்படுத்த 30வருடங்கள் சென்றன. இவர்கள் தமிழ் மக்களின் முழுக்கோரிக்கைகளையும் (ஏகாதிபத்தியத்தின் தரகுவாக இருந்து கொண்டே) வைத்து போராடுவது போல் செயற்பட்டனர். இதைப்போல் இன்று புலியின் செயற்பாடுகள் தேசியத்தின் மீது செயற்படுகின்றனர். ஆனால் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளைகளாகவும் உள்ளனர். இதை அவர்களின் பல நடவடிக்கைகள் எமக்கு எடுத்துக்காட்டியதை முன்பு சுட்டிக்காட்டினோம்.

தூண்டில் தொடர்ந்து ''சமர் சொந்த நலன் குழுநலன் என்ற பதங்களைப்பாவிக்கின்றதெ ஒழிய தரகு முதலாளிய வர்க்கநலன் எவை? அதன் அரசியல் கோசங்கள் எவை? அவை எப்படி புலிகளுடன் கோசங்களைப்பொறுத்துகின்றன எனச்சுட்டிக்காட்டவில்லை'' என்ற கருத்து தொடர்பாக முன்பு ஓரளவுக்கு சொல்லியுள்ளோம். இக்கருத்தையோட்டி மீண்டும் ஆராய்வோமாயின் சொந்த நலன், குழுநலன் என சொல்வது குறித்தவொரு பகுதி மட்டும், தங்களை மையப்படுத்தி செயற்படும் தன்மையைத்தான் இத்தன்மை தரகு முதலாளித்துவப்பிரிவுக்கு ஒரு சிறப்பான அம்சம் கூட. இக்குழுநலன் தரகாக இருக்கும் குறித்த பிரிவினரை சிறப்பாக சுட்டிக்காட்ட பயன்படுத்தியதே. இச்சக்திகளின் நலன்கள் ஒரு நாட்டை முழுமையாக ஏகாதிபத்தியத்துக்கு சேவைசெய்யும் வகையில் கையாள்வதே. தேசியவிடுதலைப்போராட்டம் தீவிரமடையும் முன்பே, இலங்கை தரகுமுதலாளித்துவ நிலப்பிரபுத்துவ நாடாக இருந்ததும், தேசியவிடுதலைப்போராட்டம் தீவிரமடைந்த பின் எந்த

மாற்றமும் தரகு முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் மீது நிகழவில்லை. தொடர்ந்தும் பேணப்படுவதுடன் மேலும் நாட்டை அடகுவைக்கவும் முயலுகின்றனர். தேசியவிடுதலைப்போராட்டம் தொடங்கிய பின், இருந்த சில தேசிய முதலாளித்துவ சொத்துக்கள், செயற்பாடுகள் முற்றாக அழிக்கப்பட்டது. தேசியவிடுதலைப்போராட்டத்தின் பின் அறிமுகம் செய்த சில உள்நாட்டு உற்பத்திகள் கூட இன்று அழிக்கப்பட்டு விட்டது. புலிகள் போராடப்பயன்படுத்தும் ஆயுதங்கள் முழுமையாக ஏகாதிபத்தியத்திடமிருந்தே பெறுகின்றனர். உள்ளூரில் சில வகையான ஆயுதங்களை தற்பொது செய்த போதும் (அவை பெருமளவில் வெளியிலிருந்து கொண்டுவரும் நெருக்கடியினால் தான்), சில அடிப்படை ஆயுதங்களை சுயமாக செய்யமுயன்றவர்களை (உள்ளுக்குள்) கொன்றுமுள்ளனர். ஏனெனில் சுய ஆயுதவுற்பத்தி சுயமான விடுதலைக்கு வித்திடும் என்பதாலேயே. புலிகள் பயிற்சி எடுத்த இடங்கள், இன்று சர்வதேச போதைவஸ்துக்களுடன் உள்ள தொடர்பு, மற்றும் யாழ்கடத்தல்காரர்களின் (அநியப்பொருட்களை சிங்கள தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக கடத்தும் தமிழ் தரகு முதலாளித்துவம்) ஆதிக்கம் புலிகள் எதைச்சார்ந்துள்ளனர் என்பதை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இன்று சுயவுற்பத்தி, கேள்வித்தாள்களில் சுயவுற்பத்தியுடன் அமைந்த கேள்விகள்; இவைகளை வைத்துக்கொண்டு தேசியத்தின் பற்றினால்தான் வருகின்றது எனச்சொன்னால் தமிழர் விடுதலைக்கூட்டணி இப்படி எத்தனையை கூறினார்கள். குறிப்பான இச்செயற்பாடுகள் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள பொருளாதார நெருக்கடியும், மக்கள் மீதான புலிகளின் பாசிச நடவடிக்கை ஏற்படுத்தும் எதிர்ப்பு உணர்வு, தங்கள் மீது பாய்யும் என்ற ஒரு அம்சம் காரணமாகவே சுயபொருளாதாரம் பற்றியும், மனித உரிமை பற்றியும், [சிறைகள், நீதிமன்றங்கள், பொலீச்சேவை உருவாக்கி ஒரு சிலவற்றை (அரசியல் கைதிகளையல்ல) விசாரித்து] நாடகமாட முற்படுகின்றனர். இவைகளிலிருந்து தேசியம் பற்றி மதிப்பிட முடியாது. புலிகளின் கோசங்கள் அன்று தமிழர் விடுதலைக்கூட்டணி 1980க்கு முன் நடத்தியது போலவே உள்ளது. வெளியில் வைக்கும் கோசத்தை மட்டும் வைத்து (அமெரிக்க ஜனாதிபதியின் ஜனநாயக் கோரிக்கைகள், சீரழிந்த கம்யூனிச்ட் கட்சியின் கோசங்கள் போன்று)நாம் தரகா, தேசியமாவென மதிப்பிட முடியாது. அவர்களின் நடவடிக்கைதான் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. அந்தவகையில் புலிகளின் செயற்பாடுகள் அனைத்தும் தேசியத்தின் பெயரால் ஏகாதிபத்தியத்துக்கு சிறப்பாக சேவைசெய்கின்றது.

எமது சொந்த மக்கள் உயிர்வாழ பனம்பழத்தை சூப்பும்பொழுது, புலிகள் கொகக்கோலாவும், சீஸ் இன்றி வாழமுடியாது உள்ளனர். சொந்த நாட்டின் உவேபத்தியில் தம்மைக்காத்துக்கொள்ள முடியாதவர்கள்; சொந்த உற்பத்திபற்றி அக்கறை காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. தேசிய முதலாளித்துவம் எனின் தேசியத்தன்மை தெளிவானதாக இருக்க வேண்டும். சொந்தத்தேசத்தில் தேசியம் கட்டியெழுப்பப்பட வேண்டும். தேசியம் கட்டியெழுப்ப ஒரு போராட்டத்தில் மிக சாதகமான (புலிகள் இன்று தளப்பிரதேசத்தை) தனமையை கொண்டுள்ளனர். இன்று அன்னியசக்திகளின் தயவில் சொந்தவுற்பத்தியை தடுக்கும் வகையில் முழுமையாக செயற்பட்டு வருகின்றனர்.

''தமிழ் மக்களின் இன்றைய போராட்டம் தேசிய விடுதலைப்போராட்டம்'' இதில் சமருக்கு எந்தக்கருத்து முரண்பாடும் கிடையாது. இப்போராட்டத்தை ஒவ்வொரு சக்தியும் தனது நோக்கில் கையாழும்; இதில் புலிகள் தனது நோக்கில் கையாழுகின்றது. புலிகள் என்னும் போது இவ்வியக்கம் ஆரம்பத்தில் குட்டிபூர்சுவா இயக்கமாக இருந்து தனது இருப்பையொட்டி தொடர்ந்து ஏகாதிபத்தியத்துடன் சரணடைந்தது. இவ்வியக்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் மிகத்தெளிவாக இன்று வெளிவருகின்றது. அவர்கள் எந்தப்பின் தளத்தில் நிற்கின்றனர் எங்கிருந்து உதவியை பெறுகின்றனர் இவைகள் தொடர்பாக முன்பு நாம் சுட்டிக்காட்டினோம்.

''நிலவுகின்ற அரசியல் காலகட்டம்'' இதை எடுப்பின் இலங்கையில் இனமுரண்பாடு பிரதான முரண்பாடாக உள்ள நிலையில், தமிழ் தரகு முதலாளிவர்க்கம் சிங்கள தரகுமுதலாளித்துவத்தின் பாதிப்பால் இவ்வின முரண்பாட்டை சாதகமாகப்பயன்படுத்துவதில் முனைந்துள்ளது. இதற்கு இசைவாக சர்வதேச நிலைமையுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நிதிமூலதனத்தின் ஊடாக மூன்றாம் உலகநாடுகளை கட்டுப்படுத்துகின்றனர். இன்று ஏகாதிபத்தியம் அனைத்து துறைகளிலும் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையில் தேசியவிடுதலைப்போராயட்டத்தையும், தனக்கு சாதகமாகப்பயன்படுத்துவதில் வெற்றிபற்றுள்ளது. இதை பல உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்; பங்களாதேஷ், சூடான், எரித்திரியா, குர்திஸ், ஆப்கானிஸ்த்தான்... இப்படி எல்லாப்போராட்டத்தையும், முழுமையாக ஏகாதிபத்தியம் பயன்படும் வகையில் உள்ளூர் தரகுமுதலாளித்துவம் பயன்படுத்தப்படுகின்றது.

''தேசியமுதலாளித்துவசக்திகள் இருக்க முடியாது என்ற எடுகோளில் இருந்து கட்டியெழுப்ப முடியும் இந்த தர்க்கம் சமரை அறியாமலேயே நடக்கிற போராட்டம் தேசியப்போராட்டம் என அங்கீகரிப்பதில் சமரை கொண்டுபோய் விட்டு விடுகின்றது'' என்ற தூண்டிலின் வாதத்தில் தேசிய முதலாளித்துவம் இருக்க முடியாது என்ற வாதம் எப்படி நடக்கும் போராட்டத்தை தேசியய விடுதலைப்போராட்டத்தை அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கின்றது? ஒரு வர்க்கம் இருக்கின்றதா, இல்லையா என்பதில் இருந்து போராட்டத்தை தேசியப்போராட்டமாக வரையறுக்க முடியாது. சமர் இன்று தமிழ் மக்கள் முன்னுள்ள போராட்டத்தை தேசிய விடுதலைப்போராட்டமாக அங்கீகரிக்கின்றது. அதிலிருந்தே நாம் விவாதத்தை நடத்துகின்றோம். இப்போராட்டத்தை புலிகள் தம் நலங்களுக்கு ஏற்ப பயன்படுத்துகின்றது. இதே போல் எல்லா வர்க்கமும் தமது நோக்கில் பயன்படுத்த முயலும். மற்றும் தேசியமுதலாளித்துவ சக்திகள் இருக்கமுடியாது என்ற எமது வாதம், மூன்றாம் உலக நாடுகளில் இன்று ஏகாதிபத்தியத்தின் பிடி இறுகிவரும் இன்றைய நிலையில் ஒரு சுதந்திரமான முதலாளி உருவாகமுடியாது. அவர்கள் தரகு முதலாளியாகவோ அன்றி மத்தியதர நிலைக்கு மாற்றப்பட்டுவருகின்றனர். மத்தியதரத்துக்கு மாறும் இவர்கள்கூட போராட்டத்தில் உள்ள வெற்றியில் நம்பிகையிழந்து தரகு முதலாளித்துவத்துடன் இணைந்துகொள்ளுகின்றார்கள். இதை எம் நாட்டி உருவான இயக்கங்களைக்கொண்டே பார்க்க முடியும். இக்கருத்தை யொட்டி மேலும் தூண்டில் ''தரகுமுதலாளிவர்க்கத்தின் அரசியல்

www.tamilarangam.net

கோரிக்கைகள் எப்படி அமையும் என்று அது குறித்து காட்டவில்லை''. இது தொடர்பாக நாம் விளக்கியுள்ளோம். தரகுமுதலாளித்துவம் அப்பட்டமாக தாம் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் என சொல்வதில்லை. அதே போல் அரசியல் கோரிக்கைகளை நேரடியாக வைப்பதில்லை. அதுவும் ஒரு விடுதலை அமைப்பு மேலும் இதை இரகசியமாக கையாண்டால் மட்டுமே உயிர்வாழ முடியும். எப்பொதும் அரசியல் கோசங்களில் இருந்து ஒரு அமைப்பு பற்றி முடிவுக்கு வருவதாயின், சரியான கட்சி, ஒரு உண்மையான சோசலிசவரசில் மட்டுமே சாத்தியம். இதற்கு மாறாக சுரண்டல் அமைப்புக்களை சரியாக இனம்காண அவர்களின் நடவடிக்கைகள் யாரைச்சார்ந்துள்ளனர் என்பதைக்கொண்டே அறியமுடியும். இதில் புலிகள் அரசுக்கு எதிரான செயற்பாட்டை நீங்கள் குறித்துக்காட்ட விரும்பலாம்; இச்செயற்பாட்டை முன்பு விளக்கியிருந்தாலும் மீண்டும் ஆராய்வோமாயின் தேசியத்தை சொல்லும் அனைவரும் தேசியவாதிகளாக இருப்பதில்லை. இதற்கு சிறந்த உதாரணமாக கிட்லர், சதாஹுசைன், பிரேமதாசா... இப்படிப்பார்க்கலாம். மக்களின் தேசிய உணர்வை சிறப்பாக பயன்படுத்தும் இவர்கள் தரகுமுதலாளிகளே. இவர்கள் யாருடன் சிறப்பான உறவை கொண்டிருக்கின்றார்கள் எனப்பார்ப்பின் அவர்களின் வர்க்க மூலத்தைப்பார்க்கலாம். இதை லெனின் ''ஒரு மனிதனை அவனது நண்பர்களைக்கொண்டு மதிப்பிடலாம். அவனது அரசியல் கூட்டாளிகள் அவனக்காக வாக்களிப்பவர்கள் ஆகியோரைக்கொண்டு ஒரு மனிதனது அரசியல் வண்ணம் இன்னதென கூறிவிடலாம் (லெனின் தேர்வு நூல் தொகுதி2, பக்கம்240)'' இதிலிருந்து புலிகளின் நண்பர்கள் தேசிய விடுதலைப்போராட்டத்தை நேசிக்கும் மக்களல்ல ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளுமே.

தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் என்றவொர் வரையறை, யாருடைய பிரதிநிதியென சொல்ல முடியாது என்பதை தூண்டில் ஒத்துக்கொள்ளுகின்றது. புலிகளின் நண்பர்கள் இன்று தெளிவானது. இதிலிருந்து புலிகளின் வர்க்க மூலம் தெளிவானது. யாருடைய பிரதிநிதியென சொல்ல முடியாது என்பதி தூண்டில் ''எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லவில்லை எங்கின்றார்களே. இது ஒரு சிக்கலான கேள்வி தான். சிக்கலுக்கான காரணம் தேசிய விடுதலைப்போராட்ட காலகட்டமாக இது இருப்பதே. உதாரணமாக ஜப்பானிய எதிர்ப்பு போராட்டமாக சீன கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போது கட்சி யாருடைய பிரதி நிதியாக செயற்பட்டது என்று சொல்லலாமா? கட்சி பாட்டாளிவர்க்கத்தின் பிரதிநிதியாகவா செயற்பட்டது? இல்லை, அது மும‌க்களினதும் அனைத்து தேசியவர்க்கத்தினதும் நலங்களை கருத்தில் கொண்டது''. எனவே புலிகள் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுவதை மட்டும் கொண்டு அதை மதிப்பிட முடியாது. யாரின் கூட்டாளியாக செயற்படுகின்றது என்பதிலிருந்தே புலிகளைப்பார்க்க வேண்டும்.

''அவர்களது போக்கு முதலாளித்துவ தேசிய வாதம் என நாம் கூறுகின்றோம். அவர்களின் பின்னால் உள்ள சக்திகள் யார் என்றால் இந்தக்கோரிக்கைகளின் தேசியத்தன்மையின் காரணமாக முழுத்தேசிய வர்க்கங்களுமே நிற்கின்றனவென கூற வேண்டும்'' எனற இவ்விவாதம் தொடர்பாக முதலாளித்துவ தேசியவாதம் தொடர்பாக தூண்டிலின் பார்வையில், தரகுமுதலாளித்துவத்தையா அல்லது தேசிய முதலாளித்துவத்தையா பிரதி செய்கின்றது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் இவர்கள் பின் எல்லாவர்க்கமும் உள்ளது என அவர்களின் அரசியல் கோரிக்கைகளையும் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்களின் அரசியல் கோரிக்கைகளில் இருந்து அது அல்லது இது என சொல்லமுடியாது என்பதை முன்பே தூண்டில் ஒத்துக்கொள்ளுகின்றது. எல்லாவர்க்கமும் அவர்களின் பின்னுள்ளது என்பது எவ்வளவுக்கு சரியானது என்ற கேள்விக்கப்பால் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானுக்கு எதிராக போராடிய போது, எல்லாவர்க்கத்தையும் பிரதி செய்ததாக கூறிய தூண்டில், புலிகள் எல்லாவர்க்கத்தினதும் தேசியக்கோரிக்கையின் பின் அணிதிரட்டியுள்ளதாக கூறி அதை முதலாளித்துவ தேசியவாதம் என எதை அடிப்படையாக வத்து கூறுகின்றார்கள். முதலாளித்துவ தேசியவாதம் என அடித்து சொல்ல தூண்டில் என்ன அடிப்படையை முன்னெடுத்ததோ, அதே போன்று புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்தில் தரகுமுதலாளித்துவத்தை பிரதி செய்வதாக அடித்துச்சொல்ல அவர்களின் நண்பர்களில் இருந்தே முடிவுக்கு வரமுடியும்.

''புலிகள் சொந்த நலன் குழுநலன் என்பவற்றிற்குப்பின்னால் உள்ள கோரிக்கைகள் தமிழ் மக்களின் தேசிய நலங்களுடன் இணைந்த கோரிக்கைகளாக உள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் புலிகள் ஊசலாடுகின்றனர் என்பது மட்டுமே ஒருவர் இவற்றிலிருந்து வரக்கூடிய முடிவுகள் ஆகும்''. எனரவாதத்தில் சொந்த நலன் குழுநலன் என்பது ஏகாதிபத்தியத்துக்கு துணைபோகும் தரகுமுதலாளித்துவத்தின் நலங்களே. புலிகள் தமிழ் மக்களின் தேசிய நலனுடன் இணைந்த கோரிக்கைகளுடன் போராடுவதை தூண்டில் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். புலிகாள் போன்ற சக்திகளை தூண்டில் கூறுவது போல் ''குறிப்பிட்ட கட்சி எந்த வர்க்கத்தின் பிரதிநிதி என்பது பற்றிய கேள்விக்கு இது அல்லது அது என திட்டவட்டமாக அதுவும் இதுபோன்ற ஒரு போராட்ட சூழலில் அறுதியிட்டு சொல்வது சாத்தியமில்லை''. ஆனால் தூண்டில் முதலாளித்துவ தேசியவாதத்தை பிரதி செய்கின்றார்கள் என அறுதியிட்டு சொல்லுகின்றர்ர்கள். இதை எப்படி சொல்லமுடிகின்றதோ அதே போல் தர்கு முதலாளித்துவத்தை பிரதி செய்கின்றார்கள் என்பதை, அவர்களின் நலங்களை பிரதிசெய்யும் குழுநல்ன், சொந்தநலன் மற்றும் அவர்களின் கூட்டாளிகளும் உறுதி செய்கின்றனர்.

''சமரின் கூற்றுப்படியே புலிகள் தமது நலங்களுக்காகவே தமிழ் மக்களின் நலனை விற்கத்துணிந்தார்கள். இது முதலாளித்துவ தேசியவாதத்தின் தன்மையே அன்றி வேறுவொன்றுமில்லை''. இவ்விவாதத்தில் தமிழ் மக்களின் நலங்களை விற்கத்துணிந்தவர்கள் தேசிய முதலாளித்துவம் அல்ல. இதன் தன்மை தர்குமுதலாளித்துவத்தின் குணாம்சமே. நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு விற்கமுனைவது என்பது தேசிய முதலாளிகள் செய்வதல்ல. இது தரகுமுதலாளிகளின் செயற்பாடாகும். ''ஏகாதிபத்தியம், இந்தியா, இலங்கையரசுடன் புலிகளின் உறவு தனித்துவத்தை அங்கீகரிக்கவே'' என்ற தூண்டிலின் வாதத்தில் தனித்துவம் என்ற உறவு என்ன? அங்கீகரிக்க முயலும் இச்சக்திகள், புலிகள் தரகாக மாறும் பட்சத்தில் மட்டுமே அங்கீகரிப்பு சாத்தியமாகும். தனித்துவத்தை அங்கீகரிப்பது என்ற கோரிக்கை தனித்துவமான தரகு தொடர்பான அடிப்படையை கொண்டதே.

www.tamilarangam.net

இஸ்ரேல் பயிற்சி கொடுக்கவும், மேற்கு நாடுகள் ஆயுதம் கொடுக்கவும் தரகு முதலாளிகளாக அங்கீகரித்ததன் பின்பேயொழிய தேசிமுதலாளிகள் என்ற அடிப்படையில் அல்ல. "புலிகளின் அரசியல் கோரிக்கைகள் தமிழர் விடுதலைக்கூட்டணியுடையதைவிட முன்னெறியவை. தமிழீழத்தை பெற இந்தியாவைத்தலையிடுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி கேட்டது. புலிகள் இந்தியத்தலையீடு தமது தனித்துவத்தை அங்கீகரிக்காததே" என்ற தூண்டிலின் இவ்விவாதம் அரசியல் கோரிக்கைகளில் இருந்து முடிவுக்கு வரமுடியாது. அவர்களின் நடைமுறை செயற்பாட்டைக்கொண்டே முடிவுக்கு வர்வேண்டும். இது தொடர்பாக மேல் விவாதித்துள்ளோம். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தரகுத்தன்மை இந்தியாவுக்கு இசைவாக தரகுக்கு ஒப்புக்கொண்டு இந்தியத்தலையீட்டை நடத்தக்கோரிய போது, புலிகள் தனக்கு முழுமையாக தரகுத்தன்மையை அங்கீகரிக்கவே இந்தியாவைக்கோரியது. இதில் தமிழர் விடுதலைக்கூட்டணி, பங்கு கொடுப்பதை புலிகள் எதிர்த்தனர். இதில் மற்றவர்களுக்கும் பங்கு கொடுப்பதை புலிகள் எதிர்த்தனர். இதில் தனித்துவத்தை என்ற பதத்தை வர்க்கமற்ற தன்மை என்ற கோட்பட்டுக்குள் (மனிதம் கூறுவது போல்) பார்க்கவில்லையென எடுக்கின்றோம். இது போலவே குழுநலன், சொந்தநலன், தனித்துவம்.... என்ற பதத்துக்கும் வர்க்கமூலம் உண்டு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். புலியின் தனித்துவக்கோரிக்கை தரகுமுதலாளித்துவத்தின் நலங்களில் இருந்து எழுந்ததே.

"தமிழர்விடுதலைக்கூட்டணியிடமிருந்த தரகுமுதலாளித்துவ சிந்தனை மக்களிடம் ஏற்படுத்திய தாக்கம் புலிகளின் முதலாளித்துவ தேசியவாதக்கருத்து மக்களை சென்றடையவில்லை" என்ற தூண்டிலின் வாதம், தூண்டில் முதலாளித்துவ தேசியவாதத்துக்குள் தேசிய முதலாளித்துவத்தையே சுட்டிக்காட்டுவதாகவுள்ளது. இன்னும் இது அல்லது அது என முடிவு எடுக்கவில்லையென இதழ் 41,48இல் சொல்லும் தூண்டில், தண்க்களை அறியாமலேயே புலிகள் தேசியமுதலாளிகளே என்பதை கட்டுரை முழுக்க வாதிடுகின்றனர். இது மேற்குறிப்பிட்டவாதத்தில் தெளிவாக வெளிவந்துள்ளது. மக்களிடம் தரகுமுதலாளித்துவ சிந்தனையுள்ளது எனின், தமிழ் மக்களின் தேசியவிடுதலைப்போராட்டம் தரகுமுதலாளித்துவ போராட்டமாகவா உள்ளது? அப்படியெனின் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் தேயவிடுதலைப்போராட்டமே இல்லையா? புலிகள் முதலாளித்துவ தேசவிடுதலையை (தேசியமுதலாளித்துவ விடுதலையை) முன்னெடுக்கின்றார்கள் எனின், மக்களே எதிராகவுள்ளனர். மக்கள் ஏகாதிபத்தியத்தை சார்ந்தும் புலிகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் உள்ளனர். தூண்டிலின் ஆய்வு முறையிலுள்ள தவறு, முங்கூட்டியே ஒரு முடிவும் இவ்விவாதத்தை நடத்தக்காரணமாக உள்ளது.

"இராஜதந்திரம் எனக்கூறி பலதடவை படுகுழியில் விழுந்த போதும், தமிழ் பகுதியின் அதிகாரத்தை பிறர்கையில் கொடுத்துவிட தயாராகைருக்கவில்லை" என்ற தூண்டிலின் விவாதத்தில் அதிகாரம் என்பது சுரண்டலை நடத்துவதே இச்சுரண்டலின் பங்கு தொடர்பாக இராஜதந்திரம் (இது மக்களை ஏமாற்ற பயன்படுத்தும் ஒரு செயற்பாடு) என்று நடத்திய பேரங்கள்; தோல்வியையும், படுகுழியில் விழுந்ததாகவும் பார்க்க வேண்டும். இதை விடுத்து "அவர்களின் அரசியலுக்கு முடியாதுள்ளது" என்பது அடிப்படையில் தவறானது.

சுரண்டலின் பங்கு தொடர்பாக எழுகின்ற பேரங்களில் தோல்வியே ஒழிய தேசியமுதலாளித்துவம் தொடர்பான அரசியல் அல்ல. தேசிய முதலாளித்துவம் எப்பொழுதும் ஏகாதிபத்தியத்துடன் உடன்பட்டு தீர்வு பெறமுடியாது. இந்தியாவிடம் மாதம் 50கோடி பெறவும், இஸ்ரேலிடம் பெற்ற பயிற்சி என்பன மிகச்சிறப்பாக, அவர்களின் பேரங்களை தெளிவாகவும், ஏகாதிபத்தியத்துக்கு துணைபோவதையும் காட்டுகின்றது.

"புலிகளின் பின்னால் உள்ள சக்திகள் உற்பத்தி முறைகாரணமாக தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினர் என குறிப்பிடப்படா விட்டாலும், உள்ளும் வெளியும் உள்ள அதன் திரண்ட ஆதரவு சக்திகளிடம் இருப்பது ஒருவகைப்பண்டைய பிரபுத்துவ சாயல் கலந்த முதலாளித்துவ தேசியவாதமே. இனவெறியுடன் கலந்து இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து புலிகளுக்கு வேண்டிய ஆதரவு செலுத்துகின்றது". இவ்விவாயதத்தில் புலிகளின் பின்னால் உள்ள உற்பத்தி முறை தேசிய முதலாளிவர்க்கம் இல்லையென ஏற்றுக்கொள்ளுகின்றது. அப்படியான் முதலாளித்துவ தேசியவாதத்தில் புலிகளின் பின்னால் உள்ளது, தேசியமுதலாளித்துவம் இல்லையெனின் தரகுமுதலாளித்துவமே. இதை தூண்டில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். "உள்ளும் வெளியிலும் திரண்ட சக்திகள்" எப்பொழுதும் உற்பத்துவி முறையை மீறி தம்போக்கில் எதையும் செய்யமுடியாது. உ+மாக நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ புரட்சிநடைபெற்ற நாடுகளில், புரட்சியை முன்னெடுத்தோர் முதலாளித்துவ உற்பத்திமுறையை கொண்டிருந்த போதும் அதற்கு உள்ளும் வெளியிலும் பாட்டாளிவர்க்கம் செயலாற்றியது. இதிலிருந்து எது உற்பத்தி முறையை தலைமை தாங்குகின்றதோ அதுவே அதன் இலக்கு ஆகும். "பண்டைய பிரபுத்துவ சாயும்கலந்த முதலாளித்துவ தேசியவாதமே". இதில் பிரபுத்துவம் என்பது எதிரியே. அதனுடன் ஒரு தேசவிடுதலைப்போராட்டத்தின் கூட்டுச்சேர்ந்திருக்கக்கூடிய ஒரேவர்க்கம் தரகுமுதலாளித்துவமே. அதாவது இது மூன்றாம் உலகநாடுகளில் எல்லாவரசுக்களிலும் காணப்படும் இயல்பே.

"இந்திராவைக்கொன்ற சீக்கியரை மதவெறிப்படுகொலையாளர் எனவர்ணித்த புலிகள் தான் இராஜீவையும் கொன்றார்கள் இது புலிகளின் அரசியலுக்கும், அதன் நலங்களுக்கும் உகந்தவிதத்தில்" என்ற இவ்விவாதத்தில் புலிகள் இந்தியாவை பயன்படுத்தும் நோக்கில் 1984இல் வெயிட்ட கருத்தே. அதாவது புலிகள் ஏகாதிபத்தியத்திடம் முழுமையாக சரணடையாத நிலையில், இந்தியாவின் கால்களில் விழும் நிலையிலிருந்த காலகட்டத்தில் நடந்தவை. இராஜீவின் கொலையென்பது வெறும் புலியின் பலிவாங்கல் என்ற நிலைக்கு அப்பால், மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் தேவையைப்பூர்த்தி செய்யும் வகையிலும் நிகழ்த்தப்பட்டது.

மார்க்சின் மேற்கோளை முன்வைத்து "அதன் அடிப்படையயில் தனது அரசியல் கோரிக்கையை முன்வைப்பார்" என்ற இவ்விவாதம் தொடர்பாக முன்பு விவாதித்துள்ளோம். இங்கு மார்க்சின் கருத்து முதலாளித்துவ நாட்டில் உள்ள குட்டிபூர்சுவா வர்க்கமும், அதன் நிலையையொட்டி வைக்கப்பட்டதே. அங்கு குட்டிபூஷ்வா வர்க்கம் தனது அரசியல் கோரிக்கைகளை (அன்று அக்கோரிக்கைகள் முற்போக்காக இருந்தது) நேரடியாக முன்வைத்தனர். மூன்றாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகநாடுகளில், அதுவும் எமது போராட்டம் போன்ற தேசியவிடுதலைப்போராட்டத்தில், தூண்டில் கூறியது போல் அது அல்லது இதுவென திட்டவட்டமாக கூறமுடியாத ஒரு நிலையில், அரசியல் கோரிக்கைகளை கொண்டு அதன்வர்க்கமூலத்தை இனம் காணமுடியாது. அரசியல் கோரிக்கைகளுக்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகளையும் நண்பர்களையும், உற்பத்தியுறவுகளுடன் உள்ள தொடர்புகளையும் கொண்டே அவர்களின் வர்க்கமூலத்தை ஆராயவேண்டும். இன்று கம்யூனிஸ்ட்டுக்கள் எனச்சொல்லும் முதலாளித்துவவாதிகளின் அரசியல் கோரிக்கைகள், அமெரிக்கா ஜனாதிபதியின் ஜனநாயக கோரிக்கைகள், இவைகளையெல்லாம் அரசியல் கோரிக்கைகளாக கொண்டு வர்க்கமூலத்தை ஆராய்ந்தால் அவர்கள் ஒவ்வொர்வரும் செய்யும் செயலுக்கு மாருபட்டவகையில் அடங்குவர். எனவே அரசியல் கோரிக்கைகளை ஆய்வுக்கு எடுப்பின், குறித்த சக்தி குரித்த போராட்டத்தில் முற்போக்கான நிலையில் இருந்தால் மட்டுமே அரசியல் கோரிக்கையிலிருந்து முடிவுக்கு வந்தடைய முடியும்.

''புலிகள் தரகுமுதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது என்றால் ஒடுக்கப்பட்ட தேசம் ஒன்றின் தரகுமுதலாளித்துவம் போகக்கூடிய உச்சவெல்லைக்கு அது போய்யிருக்க வேண்டும். இந்தியாவரசை முற்றாக நம்பி ஆயுதங்களை ஒப்படைத்திருக்க வேண்டும் அல்லது இலங்கையரசின் ஒற்றையாட்சி அதிகாரத்துக்கு உடன்பட்டிருக்க வேண்டும்''. தூண்டிலின் இவ்விவாதத்தையொ எடுப்பின் புலிகள் சமரசத்துக்கு போகமாட்டார்கள் என்பதை (எதிர்காலத்தில்) தூண்டில் மறுக்க மாட்டார்கள். அப்படிப்போனவுடன் அவர்களை தரகுமுதலாளிகள் என வரையறுக்க தூண்டில் உடன்படுகின்றது. இப்பிரச்சனையில் இப்ப புலிகள் என்னவென்பதே நாளை போவார்கள் எனின், இன்று அவர்கள் தரகு முதலாளிகளே. இந்திய விடுதலைப்போராட்டத்தில் காந்தியின் செயற்பாடு தேசியமுதலாளித்துவமா? தரகுமுதலாளித்துவமா? காந்தி தரகுமுதலாளியாகவே செயற்பட்டவர். இதை காந்தி எழுதிய பல கடிதத்தில் ஒன்றை முன்வைக்கின்றோம். 1930இல் வைசிராஜவுக்கு எழுதிய கடிதத்தில் தமது இயக்கம் பிரிட்ஷ் ஏகதிபத்தியத்தை எதிர்த்து துவங்கப்பட்டதல்லவென்றும், இந்தியப்புரட்சி இயக்காத்தை எதிர்த்தே அது துவங்கப்பட்டது என எழுதியுள்ளார். இன்னுமொரு இடத்தில் காந்தி வர்க்கயுத்தத்தை தடுப்பதற்கு எனது சொல்வாக்கின் முழுப்பலத்தையும் பயன்படுத்துவென் என்பதைப்பற்றி நீங்கள் உறுதியாக இருக்கலாம். உங்களிடமிருந்து (நிலப்பிரபுகள், தரகுமுதலாளிகள்) சொத்துக்களைப்பறிக்க அநீதியான ஒரு முயற்சி நடந்தால் அப்போது உங்கள் பக்கம் சேர்ந்து கொண்டு இந்த காந்தி போராட்டம் நடத்துவதை நீங்கள் காணலாம் என காந்தி கூறினார். காந்தியின் போராட்டத்துக்கும் புலிகளின் போராட்டத்துக்கும் என்ன வேறுபாடு. ஆக அகிம்சை, ஆயுதப்போராட்டம் மட்டுமே. இதற்கு அப்பால் ஏகாதிபத்தியத்தின் சிறந்த பிரதிநிதிகளாக இருவரும் இருந்தனர். மேற்குறிப்பிட்ட காந்தி தொடர்பான விடயம் புதிய ஜனநாயக வெளியீடான காந்திகாங்கிரஸ் துரோகவரலாறு என்னும் புத்தகத்தில் எடுக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்தை சார்ந்து எப்படியொரு விடுதலை அமைப்பு செயற்படும் என்பதற்கு பல விடயங்களை இப்புத்தகத்தில் பார்க்கலாம். இது ஒரு புறமிருக்க இந்தியாவிடம் முற்றாக அடிபணிய மறுத்ததற்கும், புலிகள் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாக இருந்ததும் இந்தியாவிடம் முற்றாக சரணடைய முடியாததற்கு முக்கிய காரணமாகும். தரகை மாற்றுவது தொடர்பாக இந்தியா தொடர்பாகவிருந்த அச்சம் கூட புலிகள் ஊசலாடியது. இலங்கையரசுடன் ஆன உறவென்பது, மேற்கத்தைய நாடுகளின் தேவையொடு அமைவதே. இன்று எழுந்துவரும் தேசிய விடுதலைப்போராட்டத்தை பயன்படுத்தி, தென்னாசியாவின் சமநிலையை உடைக்கவும், மேற்கத்தைய ஏகாதிபத்தியத்துக்கு மோதலை நடத்துவது தேவையாகவுள்ளது. ஒரு ஏகாதிபத்தியம் தனது தேவையுடன் முரண்பட்ட சக்திகளைப்பயன்படுத்தும் இதை தூண்டில் மறுக்காது என நினைக்கின்றோம். அந்தவகையில் தான் இன்று புலிகளின் மோதலைப்பார்க்க வேண்டும். ஆனால் நாளை தென்னாசியாவின் பலம் பலவீனத்துடன் சமரசம் ஏற்படும். மற்றும் புலிகள் சார்ந்த தமிழ்தரகுமுதலாளிகளுக்கும் சுரண்டலின் பங்கு தொடர்பாக இந்தியா சார்ந்த தமிழ் தரகுமுதலாளிகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடு சமரசம் அடைய முடியவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி (தமிழ்தரகுமுதலாளித்துவ வேறு ஏகாதிபத்திய பிரதிநிதிகள்) சிங்கள தரகு முதலாளித்துவத்துடன் நீண்டகாலமாக மோதியதும் இதன் தொடர்ச்சியாக இனப்போராட்டத்தை நோக்கி விரிவுபட்டு இன்று இனமுரண்பாடாக மாறுபட்டு விட்டது.

''இந்தியப்படையை எதிர்ப்பது என்பது தாகுமுதலாளித்துவத்தின் எல்லைமீறிய அரசியல் நடவடிக்கைகள்'' அப்படியெனின்: சதாம்ஹுசைன், கடாபி, பனாமா அதிபர்... இவர்கள் தேசிய முதலாளிகளா? இங்கு ஒரு ஏகாதிபத்தியம் தனது தேவைக்காக புலிகள் போன்ற சக்திகளை பயன்படுத்தும். அந்தவகையில் புலிகளை இந்தியா என்ற பிராந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஏகாதிபத்தியம் பயன்படுத்தியது. இதே போன்று பிரேமதாசாவையும் பயன்படுத்தியது. பிரேமதாசாவின் இந்தியப்படையே வெளியேறு என்ற கோசம், தேசிய முதலாளித்துவத்தின் கோசம் அல்ல. இது தரகு முதலாளித்துவத்தின் கோசமே. எனவே தரகு முதலாளிகளுக்குமிடையே மோதல்கள் நிகழும். ஏகாதிபத்தியத்துக்குமிடையேயும் மோதல் நிகழும். இதைக்காண தூண்டில் தவறிவிடுகின்றது. இறுதிமுடிவில் தூண்டில் முதலாளித்துவதேசியவாதம் என்பதை அது அல்லது இது, அதாவது தரகுமுதலாளித்துவமா? தேசியமுதலாளித்துவமா? என வரையறுக்காமல் விட்டுவிடுகின்றனர். இடைக்கிடை தரகுமுதலாளித்துவம் இல்லையென அடித்துவாதிட முற்படுகின்றனர். தூண்டிலின் இவ்விவாதம் புலியின் போக்கை தாகுமுதலாளித்துவம் என ஒருபக்கத்தில் ஏற்கத்தான் செய்கின்றனர். ஆனால் அதை மறுத்துவிடவும் செய்கின்றனர். ஆனால் மொத்தத்தில் கட்டுரை முழுமையாக தாகுமுதலாளித்துவத்தின் பக்கத்தை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

சமர் 5.6 (பிரான்ஸ்)

www.tamilarangam.net

# வேலிகள்

யாழ் நகரின் அழகான பல கட்டிடங்கள் தொடர்ந்து நடந்த போராட்டங்களினால் இடியுண்டு, எரிந்து, அழிந்து அந்த நகரமே சோபையிழந்து காட்சியளித்தது. அந்த இடிபாடுகளுக்கும் இடையிலும், தெருவோரங்களிலும், சந்திகளிலும் ''பயங்கரவாதிகள்'' என்ற பட்டப்பெயரோடு சாதாரண பொதுமக்கள் சூடுபட்டு இறந்து கிடந்த அந்தக் கொடூரக் காட்சிகள் கூட இன்னும் மக்களது மனங்களை விட்டு அகலவில்லை. 'போர்நிறுத்த'த்தின் பின் ஏற்பட்ட அந்தச் சிறிய அமைதியில் மக்கள் ஒவ்வொருவரும் தமது நிலைமைகளைச் சீர்செய்வதில் சுறுசுறுப் படைந்தனர். வாகனங்களின் இரைச்சலும், ஜன நடமாட்டமும் படிப்படியாகக் கூடி நகரம் மீண்டும் களைகட்டி நின்றது. முன்பெல்லாம் தொல்லையாகத் தெரியும் யாழ்தேவி, இன்ரசிற்றி ரயில்களின் இரைச்சல்கள் கூட மக்களின் காதுகளுக்கு பிடித்தமாக மாறி இருந்தது.

அவன் விற்பனையாளனாகப் பணிபுரியும் யாழ்நகரின் பிரபல்யமான அந்த நிறுவனத்தை அங்கு அருகே நடந்த ஒரு சம்பவத்தைச் சாட்டாக வைத்து இராணுவத்தினர் தீவைத்துக் கொழுத்திவிட்டனர். எஞ்சியிருந்த நிறுவனத்தின் ஒரு பகுதியும் இருபது தடவைகளுக்கு மேல் துப்பாக்கி இளைஞர்களின் கொள்ளைகளுக்கு இலக்கானதால் முற்றாக மூடிவிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. இதனால் வேலை இழந்து போனவர்களில் அருளானந்தமும் ஒருவனாக இருந்தான். குடும்பம் மனைவி குழந்தைகளுடன் மாதாமாதம் கிடைத்து வந்த ஊதியமே போதாதநிலையில், கடனோடும் வட்டியோடும் காலங் கழித்த அவனுக்கு வேலையே பறிபோனபோது... அதுவும் கடைச்சிப்பந்தியாக மட்டுமே இருந்து பழக்கப்பட்டுவிட்ட அவனது கைகால்களைக் கொண்டு புதிதாக எந்தத் தொழிலையும் தேடுவதில் செய்வதில் உள்ள சிரமங்களை அவன் உணர்ந்தபோது மிகவும் வேதனையடைந்தான். அவனைப் போன்ற ஒரு நிலையில்தான் 80 ஆம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தில் இந்த அரசால் பழிவாங்கப்பட்ட ஊழியர்களில் பலபேர் ஏன் தற்கொலை செய்து கொண்டார்கள் என்பதை அவனால் உணரமுடிந்தது. ஆனால் அவனிடம் இருந்த கொள்கைப் பற்றும் மன உறுதியும் அத்தகைய முடிவுகளுக்கு அவனை வரவிடாமல் தடுத்து அரசுக்கெதிரான வர்க்க வைராக்கியத்தையே அவனிடம் மேலும் வளர்த்து விட்டிருந்தது.

நகரத்தில் கூடும் ஜனங்களின் எண்ணிக்கையைப் பார்த்ததும் தன்னைப்போல ஒரு சிலர் தான் அந்த இடைக்காலத்தில் பாதிக்கப்பட்டதாக அருள் நினைத்திருந்தான். தனது நெருங்கிய உறவினரிடம் கைமாற்று வாங்குவதாக ஒரு விவசாயக் கிராமத்துக்கு சென்று வெறுங்கையோடு திரும்பியபோதுதான் ஒவ்வொருவரது முகத்திலும் வெளித்தெரியும் பொருளாதார அவலங்களின் வெளிப்பாடுகளை அவனால் அடையாளங் காண முடிந்தது. தொடர்ச்சியான மருந்து, உர விலைகள், எண்ணெய் தட்டுப்பாடுகள், மழை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெள்ள அழிவுகள், உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வசதியில்லாமை என்பவற்றால் அந்த விவசாயிகளின் நாளாந்த வாழ்வே பாதிக்கப்பட்டிருந்தது. அதை நேரில் கண்டபோது போர்க்காலத்தில் இயல்பாகவே ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், இழப்புகள். பட்டினிச்சாவுகளுக் கெதிராக எல்லோருமே விழிப்பாக இருக்கவேண்டும் என்பதை அவன் உணர்ந்தான். இருந்தபோதும் சில இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களின் தவறான நடவடிக்கைகளினால் ஏற்படும் உயிரிழப்புக்களையும், பொருளழிவுகளையும், பாதிப்புக்களையும் இயல்பானது என்று அவனால் கருத முடியவில்லை. அவனது கருத்தை உறுதிப்படுத்துவது போல கிராமப்புறங்களிலும், நகரங்களிலும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் விழிப்படைந்து, ஊர்வலங்களையும், உண்ணாவிரதப் போராட்டங்களையும் பரவலாக நடத்தி வந்தனர். அத்தகைய நடவடிக்கைகள் அரசுக்கெதிரான அந்த இயக்கங்களைப் பலவீனப்படுத்தி விடும் என்று அருள் கருதியதினால் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எதிராக அப்படியான போராட்டங்களை நடத்துவதை அவன் விரும்பவில்லை.

ஆனால் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற அத்தகைய போராட்டங்கள் அவர்களையும் பாதித்திருக்க வேண்டும். கனகுவைப் போன்ற இருநூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை இழக்கவேண்டியிருந்ததினால் அவர்களது உணர்வும் ஐக்கியமும் ஒரு பலமாக மாறியது. கொள்ளைகள், தீச்செயல்களுக்கு எதிராக உண்ணாவிரதம் ஊர்வலம் நடத்துவது என்ற முடிவுக்கும் அவர்கள் வந்து விட்டனர்.

அன்று வேலை முடிந்ததும் உதவி முகாமையாளர் ரவீந்திரன் அருளிடம் வந்தார்.

''அருள்... நாங்களும் சும்மா இருக்கேலாது... சத்தியாக்கிரகமாவது செய்யவேணும்.''

''என்ன, இயக்கங்களுக்கு எதிராகவோ?''

''சீ...நாங்கள் இயக்கங்களை எதிர்க்கேல்லை...அவையின்ரை தவறான நடவடிக்கையளைத்தான் எதிர்க்கிறம்.''

''ஓ... கட்டாயம் உதுகளைக் கண்டிக்கத்தான் வேணும்...ஆனால் பகிரங்கமாச் செய்யேக்கை இயக்கங்களைப் பாதிக்குமெண்டுதான் நினைக்கிறன்.''

அவர்களது நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பின்னும் அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்று எண்ணும் அருளின் அரசக்கெதிரான அந்த உணர்வைக் கண்டு ரவீந்திரன் ஒரு கணம் வியப்படைந்தார்.

ஏன் சாதாரணமாக ஒன்றுமறியாதவர்கள் என்று கருதப்படும் மக்கள் கூட இளைஞர்கள் விடும் தவறுகளை, அவர்கள்தான் செய்தார்கள் என்ற உண்மையை அறிந்த பின்னும், ''உது அவங்கள்தான் செய்து போட்டு பொடியங்களைச் சாட்டுறாங்கள்'' என்று மூடி மறைப்பதையும், அதை எவராவது உறுதிப்படுத்திவிட்டால் ''நாங்கள் உப்பிடித்தான் கதைக்கவேணும்'' என்று கூறி அவர்களைப் பாதுகாக்கும் அரசுக்கெதிரான மக்களின் அந்த உணர்வையும் கண்டு அவர் வியம்புற்றிருக்கிறார். ஆனால் அந்த மக்களின் உணர்வுகளை மதிக்காது அதை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தவறுகளைச் செய்யத் துணியும் சில இளைஞர்களின் நடத்தையால்... அதே மக்கள் பாதிக்கப்படும்போது... மக்கள் அதை எதிர்ப்பது சரியானது என்பதை அவர் உணர்ந்தார். தாங்கள் எடுத்த முடிவு தவறில்லை என்பதை மீண்டும் அவர் உறுதிப்படுத்திக் கொண்டார்.

''தோழர்... பகிரங்கமாகக் கண்டிக்கிறது எனக்கும் விருப்பமில்லை...ஆனால் சம்பந்தப்பட்டவையை...தனிப்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படச் சந்திக்கிற ஒரு நடைமுறைப் பிரச்சனை இருக்கு... அதுக்காக... மக்கள் கண்டிக்காமை விடுறதாலையும்... பிழையள் கூடி... மக்கள் பாதிக்கப்படுறதோடை மட்டு மில்லை...இயக்கங்களுக்கும் நிச்சயமாப் பாதிப்பு வரும்.''

''ஓ...சனங்களும் சும்மா... பின்னாலை நிண்டு உசார் குடுக்காமை இறங்கினாத்தான் போராட்டம் சரியான திக்கிலை போகும்.''

''நேரமாகுது... அவையோடையும் கதைச்சனான்... ஒருக்கா முடிவை அறிவிச்சுவிடுறீரே...''

''ஓ...ஓ... நான் கதைக்கிறன்''

அங்கு நின்று கதைத்த அந்தச் சொற்ப நேரத் தாமதத்தை ஈடுசெய்வது போல வேகமாக நடக்கும் ரவீந்திரனையே பார்த்தபடி நிற்கிறான் அருள். இருபது வருடங்களுக்கு மேலாக இருவரும் ஒரே ஸ்தாபனத்தில் வேலை செய்து வருவதுடன் அரசியல் ரீதியாக அவர் களிடையே இருந்துவந்த நெருங்கிய உறவை அவர்கள் வெளிக்காட்டாமலே இருந்து வந்தனர்.

படித்துவிட்டு வேலை தேடி அலைந்த காலத்திலேயே அந்த நிறுவனத்தில் சாதாரண கிளார்க்காக வேலைக்குச் சேர்ந்த ரவீந்திரன் தனது ஒழுக்கம், நேர்மை செயற்றிறன் இவைகளால் உதவி முகாமையாளராகப் பதவி உயர்த்தப் பட்டபோது, அதை விரும்பாத பல மேல்தட்டு உத்தியோ கத்தர்களின் புறுபுறுப்புக்களை அருள் தனது காதுகளா லேயே கேட்டிருக்கிறான். தான் ஒரு அரசியல் இயக்கத்தவன் என்று வெளிக்காட்டி ஆடம்பரம் எதுவும் செய்யாமலே அமைதியாக இருந்து உறுதியாகவும் உற்சாகமாகவும் செயற் படும் அவரது நடைமுறை அந்த இயக்கத்தின் மீதே அருளுக்கு நம்பிக்கையை வலுப்படுத்தியிருந்தது.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்க நாட்டை ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் சொர்க்க பூமியாக பல பேரும் கனவு கண்ட அந்த நாட்களிலேயே இந்தோ சீனத்தில் அமெரிக்க வெறியர்கள் செய்த படுகொலைகளுக் கெதிராக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமெரிக்க ஸ்தானிகருக்கெதிரான ஆர்ப்பாட்டத்திலும், பலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்த இஸ்ரேலிய சியோனிச வாதிகளுக் கெதிரான ஆர்ப்பாட்டங்களிலும் முன்னின்ற அவர் வடபகுதியில் நடந்த தாழ்த்தப்பட்ட மக்களின் போராட் டங்களிலும் அந்த மக்களின் பக்கம் உறுதியாக நின்ற அந்தக காலங்களை அவன் நினைத்துப் பார்க்கிறான். அருள்கூட அந்த இளம் வயதில் வறுமையும் அவரது நட்பும் கற்றுத்தந்த வர்க்கப் பாடத்தை இன்னும் மறக்கவில்லை. பாராளுமன்ற ஆட்சி மாற்றங்களாலல்ல ஆயுதப் போராட் டத்தால் ஏற்படும் ஓர் அடிப்படைச் சமூக மாற்றத்தின் மூலமே தங்களைப் போன்றவர்களின் துயர்களுக்கு விடிவு கிட்டும் என்று தனது தோழர்களுடன் சேர்ந்து நகரத்தின் தெருக்களெல்லாம் போஸ்டர்கள் ஒட்டிய காலத்தினை நினைத்துப் பார்க்கிறான். அப்பொழுது முதல் மக்களோடு சேர்ந்து போராடும் போராளிகளாகவே தம்மைக் கருதிக் கொண்ட அவர்கள் அத்தகைய போராளிகளுக்கு இருக்க வேண்டிய ஒழுக்கம், கட்டுப்பாடு, மக்களை நேசிக்கும் உயர்ந்த பண்பு இவைகளைத் தாமும் கடைப்பிடிப்பதில் உறுதியாயிருந்து வந்தனர்.

கிராமங்களிலும்— நகரங்களிலும்—அந்த மண்ணிலேயே காலூன்றி அந்த மக்களிலேயே தங்கி நின்று—ஒன்றிணைந்து வேலை செய்யும் அவர்களிடம் எத்தனையோ முன்னு தாரணமான நடவடிக்கைகளை அவன் கண்டிருக்கிறான்.

அந்த நிறுவனம் இராணுவத்தினரால் தீ வைக்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கும்போது கூட அந்த அரசியல்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கட்சியைச் சேர்ந்த இரு தோழர்கள் அந்தத் துப்பாக்கி முழக்கங்களுக்கிடையிலும்...அங்கு வந்து... அந்த நிறுவனத்தின் ஒரு பகுதியை எரிய விடாமல் பாதுகாப்பதில் காட்டிய தீரம்—ஜுவாலை விட்டெரியும் தீப்பிளம்புகளுக்கு மத்தியில்—தொழிலாளர்களுடன் சேர்ந்து இடிந்து விழுந்து கொண்டிருக்கும் கட்டிடங்களுக்கு மத்தியில்—மக்களின் பாவனைக்குரிய அந்தப் பொருட்களை மீட்பதில் தங்களது உயிரையும் உடலையும் மதியாது செயற்பட்ட அந்த காட்சியினை—அந்த உணர்வை இந்த இளைஞர்களும் பெறக் கூடாதா என்ற ஏக்கம் அருளிடம் அன்றே எழுந்திருந்தது.

மறுநாள் காலைத் தினசரியில் அவர்களது உண்ணா விரதச் செய்தி முன் பக்கத்தில் வந்திருந்தது. மக்களுடன் தொடர்புடைய பிரபலமான நிறுவனத்தின் ஊழியர்கள் எடுத்த முடிவுக்கு மக்களின் ஆதரவு இருந்தது. காலையில் கடைத்தெருவால் வரும்பொழுது பத்திரிகை படித்துக் கொண்டிருந்தவர்களின் விமர்சனங்களிலிருந்து அருள் இதைத் தெரிந்து கொண்டான். இயக்கங்களைச் சேர்ந்த சில இளைஞர்கள் காலையில் அங்கு வந்தனர். ரவீந்திரன் அமர்ந்திருந்த அறையை நோக்கி நடந்தனர். அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டே சிநேக பூர்வமான முறையில் பேச ஆரம்பித்தனர். அந்த நிறுவனத்தின் ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் அறைக்குள் வந்து கூடினர்.

''எப்படியும் நீங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேணும்...இதுகளாலை இயக்கங்களைப் பற்றி மக்கள் தவறா நினைப்பினம்...''

ரவீந்திரன் பதவி உயர்த்தப்பட்டபோது புறுபுறுத்த உத்தியோகத்தர் சிலர் 'ஏன் தொல்லைகளுக்குள் அகப் படுவான்' என்று அச்சத்தால் மௌனமாகிவிடுகின்றனர். ரவீந்திரன்தான் முன்னின்று பதிலளிக்கிறார்.

''நாங்களும் அதை உணருறம். ஆனால் பாதிக்கப் படுகிற தொழிலாளற்றை வாழ்க்கைப் பிரச்சினை இது—இதிலை நாங்கள் ஒண்டும் செய்யாமல் இருக்கேலாது''

''நீங்கள் இந்த நிறுவனத்தை இழுத்து மூடவேண் டாம்...கொள்ளை போன பொருட்களை நாங்கள் மீட்டுத் தர முயற்சிக்கிறம்.''

''அப்படியெண்டா அது நல்ல விஷயம்...உண்ணா விரதத்தை நாங்கள் ஒத்திப்போடுறம். அதுக்கிடையிலை நீங்கள் இதைச் செய்து தரவேணும்.''

''ஓ... அப்பிடி மீட்டுத் தராட்டி நீங்கள் உண்ணா விரதம் இருங்கோ''

''நாங்களும் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான்... ஆயுதப் போராட்டத்தைத்தான் நாங்களும் நம்பிறம்... ஆனால் யுத்தத்திலை உணவு விநியோகத்தைத் தடுக்கிறது எதிரியள் செய்யிற வேலை...ஒரு வழியிலை, மக்களுக்குத் தேவையான உணவு விநியோகத்தை பாது காக்கிற வேலையைத்தான் நாங்கள் செய்யவேணும்...''

''ஓ... நீங்கள் சொல்லுறது சரிதான்...''

ரவீந்திரனின் அந்த மெலிந்த உருவத்துக்குள் அடங்கி யிருக்கும் துணிச்சலும் அறிவும் தன்னலமற்று மக்களை நேசிக்கும் அந்த உணர்வும் அங்கு கூடியிருந்தவர்களிடமும் பரவுகிறது.

''இந்த ஸ்தாபனம் தொடர்ந்து நடந்தால்தான் அரசாங்கத்திட்டை நஷ்டஈடு, இன்சூரன்ஸ் எதெண்டாலும் எடுக்கலாம்... அதுதான் போனாலும்—இந்த ஸ்தாபனத்தை


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்பி... இஞ்சை வேலை செய்யிற ஒவ்வொரு தொழிலாளியளின்றை குடும்பக் கஷ்டங்களும் எனக்குத் தெரியும்... அவையள் ஒவ்வொருவரும் ராஜினாமாக் கடிதத்தோடை வரிசையா வந்து நிக்கேக்கை... சீ... எங்கையோ போராட வெளிக்கிட்டு எங்கையோ நிக்கிறம்...''

''உங்கடை நிலைமை எங்களுக்கு விளங்குது...எப்பிடியும் தொடர்ந்து நடத்திறதுக்கு நாங்கள் உதவி செய்யிறம்''

ரவீந்திரனின் வார்த்தைகள் அவர்களுக்கு நியாயமாகப் பட்டிருக்க வேண்டும். அமைதியாக விடைபெற்றுக்கொண்டு வெளியேறுகின்றனர்.

தங்களைப் போன்ற தொழிலாளர்களின் பாதிப்புக்களுக்கெதிராக துணிச்சலுடன் நிற்கும் ரவீந்திரனின் உணர்வு அருளுக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் மேலும் உற்சாகத்தைக் கொடுக்கிறது.

குறிக்கப்பட்ட நாட்கள் நகர்ந்தபின்னும் கொள்ளை போன பொருட்கள் திருப்பிக் கொடுபடவில்லை.

அன்றைய காலைத்தினசரியில் மீண்டும் உண்ணாவிரதம் பற்றிய செய்தி இடம்பெறுகிறது.

இராணுவத்தினரால் எரித்துத் தகர்க்கப்பட்ட அந்த நிறுவனத்தின் முன்னால் இளைஞர்களின் கொள்ளைகளினால் மூடப்பட்டு வேலை இழந்த தொழிலாளர்கள் சுலோக அட்டைகளுடன் அமர்ந்திருக்கின்றனர். ஜன நடமாட்டம் அதிகமுள்ள அந்தப் பிரதான வீதிகள் சந்திக்குமிடத்தில், சுலோக அட்டைகளுடன் பெருந்தொகையான தொழிலாளர்கள் அமர்ந்திருந்த அந்தக் காட்சி... எல்லோரது மனங்களையும் ஈர்க்கிறது.

மதியவேளைக்குப் பின் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டு ஊர்வலம் புறப்படுகிறது...கோஷங்கள் முழங்குகிறது...

''மக்களின் உடமைகளில்...கை வையாதே!''
''விடுதலை இயக்கத்தில்...கொள்ளையர் கும்பலா?''
கொள்ளையடித்த பொருள்களை...திருப்பிக்கொடு''

யாழ்நகரின் வீதிகளின் இருமருங்கும் பெருந்தொகையான மக்கள் கூடிநின்றுபார்க்க அதன் நடுவே தொழிலாளர்கள் உணர்ச்சிவசமாக கோஷங்களை எழுப்பியபடி முன்னேறுகின்றனர்.

ஊர்வலத்தின் முன்னால் ரவீந்திரனும், அருளும் உறுதியாகக் கோஷமெழுப்பியபடி செல்கின்றனர். எதிரிக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு மட்டுமல்ல, போராட்டத் திசைகளை நேர்ப்படுத்திச் சீராக்கவும் அதுபோன்ற ஊர்வலங்கள் தொடர்கின்றன...மக்கள் மென்மேலும் விழிப்படைகின்றனர். ○

'தாயகம்'
ஆகஸ்ட், 1985

தேசிய கலை இலக்கியப் பேரவை (இலங்கை)


நன்றி:

சரவணபாலு பதிப்பகம் (இந்தியா)
அன்னம் (இந்தியா)
சமர் (பிரான்ஸ்)
தேசிய கலை இலக்கியப்பேரவை (இலங்கை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




08.09.1992 (வீ) 000000000
கொழும்பு கொம்பனித்தெரு நீதிமன்ற வளவுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த 25பேர் கொண்ட கோஷ்டி பெண் கைதி ஒருவரைக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளத.

தனியார் துறையினருக்கு தோட்டங்கள் கையளிக்கப்பட்டபின் வாரத்தில் 1 நாள் மட்டுமே வேலை வழங்கப்படுவதால் தோட்டத் தொழிலாளர்கள் வேலை தேடி நகரங்களில் அலைந்து திரிகின்றனர்.

10.09.1992 (வீ) 0000000000
யாழ்குடாவில் மொத்தம் 12 இலட்சத்து 9ஆயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர். 43 பாடசாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டிருப்பதால் 3ஆம் தவணைக்காக திறக்கப்படவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட சிறுதொகை பதவி வெற்றிடங்களுக்கும் புலமைப் பரிசில் தெரிவுகளிலும் இனவிகிதாசாரத்தைப் பார்க்க முடியாது. அதிலும் குறிப்பாக சர்வதேசப் புலமைப் பரிசில் தெரிவுகளில் இனவிகிதாசாரத்தைப் பேணமுடியாது - தேசிய இளைஞர்சேவைகள் மன்ற வெளிநாட்டு அலுவல்கள் பிரதிப் பணிப்பாளர்.

11.09.1992 (வீ) 0000000000
வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் அகதிகள் தங்கும் கொழும்பிலுள்ள 4 அகதி முகாம்களும் இந்த மாதத்துடன் மூடப்படவிருக்கின்றன. மொத்தம் 20 ஆயிரம் அகதிகள் இங்கு கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக தங்கியுள்ளனர். இவ்வகதிகள் அனைவரும் தத்தமது சொந்த மாவட்டத்திற்கு அனுப்பப்படுவர். இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வராத யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் வவுனியா தாண்டிக்குளம் முகாமில் வைத்துப் பராமரிக்கப்படுவார்கள்.

கல்முனையில் 5 தமிழர்களும், காரைதீவு அகதி முகாமைச் சேர்ந்த 2 அகதிகளும் காணாமற் போயுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இறக்கும் சிசுக்களின் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது. கடந்த 7 மாத காலத்தில் 283 சிசு மரணங்கள் இடம் பெற்றுள்ளன. உணவுத்தட்டுப்பாடு. போஷாக்கின்மை. சுகாதார-பாதுகாப்பு வசதிகள் குறைவு ஆகியவை சிசு மரணங்கள் அதிகரிக்கக் காரணமாகும்.

12.09.1992 (வீ) 0000000000
வீரவில தடுப்பு முகாமிலுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த 87 பேர் தமது விடுதலையைக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நீராகாரங்களைக்கூட தவிர்த்துவரும் இவர்களில் பலர் உணர்விழந்துள்ளனர்.

வவுனியாப் பகுதியில் குடாக்கச்சுக்கொடி கிராமத்தில் 40 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 5 சிங்கள மக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

களுத்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 425 தமிழர்கள் முகாம் காவலர்களாலும். சிங்களக் கைதிகளாலும் பொல்லால் தாக்கப்பட்டு வருகின்றனர்.

13.09.1992 (வீ) 0000000000
அம்பாறை மாவட்டத்தில் பெண்கள்தான் கூடுதலான உழைப்பாளிகள் என்றும், ஆண்கள் சோம்பேறிகளாகவும். மதுவுக்கு அடிமையாக இருப்பதாகவும் அண்மைய மதிப்பீடு தெரிவிக்கின்றது. உள்ளூரில் உற்பத்தி, விற்பனைகளில் பெண்கள் பங்கெடுக்கின்ற அதேநேரம் கணிசமான பெண்கள் மத்திய கிழக்கில் பணிப்பெண்களாக வேலை செய்து அனுப்பும் பணத்தில் ஆண்கள் பயனற்ற விதத்தில் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர்.

14.09.1992 (வீ) 0000000000
அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு நிவாரணத்தை அநாவசியமாகக் குறைத்துள்ள அதேவேளை வெலிஓயாவில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காக அரசு 35 பில்லியன் ரூபாயைச் செலவு செய்கின்றது.

சுமார் 33 வருடங்கள் சேவையாற்றியபின் ஓய்வு பெற்றுள்ள

www.tamilarangam.net

14 நகரசுத்தி தொழிலாளர்களின் வீடுகளை மீண்டும் நகர சபையிடம் ஒப்படைக்குமாறு மாத்தளையில் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ் வீடுகளில் வசித்துவரும் தொழிலாளர்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் கையளிக்கப்பட்ட இவ் வீடுகளை தங்கள் சொந்தச் செலவிலேயே பூர்த்தி செய்துள்ளதுடன், தண்ணீர், மின்சாரம் என்பவற்றைத் தங்கள் பணத்திலேயே பெற்றார்கள்.

15.09.1992 (வீ) 0000000000
இவ் வருடம் ஒகஸ்ட் மாதம் வரையில் இலங்கையில் காணாமற் போனோரின் தொகை 3,589. இதில் 93 பேரே உயிருடனிருக்கின்றனர். மட்டக்களப்பிலிருந்து மட்டும் 2,143 பேர் காணாமற் போயுள்ளனர்.

சீசன் ரிக்கற் வைத்துள்ள தோட்டப்புற பிள்ளைகளை பஸ்ஸில் ஏற்றிக்கொள்ள மறுக்கப்பட்டு வருகிறது.

களனியில் 12 தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

17.09.1992 (வீ) 0000000000
தொழிலாளர்கள் தங்களுக்கு இழைக்கப்படுவதாகக் கருதும் எந்தவொரு அநீதிக்கும் நியாயம் தேடும் முகமாக தங்களை அணிதிரட்டுவதற்கு அவர்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை அழித்தொழிக்கும் வகையிலான அவசர கால ஒழுங்குவிதிகளை அரசு பிரகடனம் செய்துள்ளது. வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை இது பறித்துள்ளதுடன், எந்தவொரு தொழிற் சங்க நடவடிக்கையையும் சொல்லாலோ, செயலாலோ ஆதரிக்கும் எவரையும் 20 வருடங்களுக்கு சிறையிலடைக்கும்.

18.09.1992 (வீ) 0000000000
கல்லடி கிராமம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு ஆண்களும், பெண்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

20.09.1992 (வீ) 0000000000
பெலவத்தை தடுப்பு முகாமிலிருந்து சுமார் 60அடி நீளமான சுரங்கப் பாதையைக் கடந்து அவ் வழியாக ஆயிரக்கணக்கான கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட 2 ஆயிரத்திற்கும் அதிகமான சந்தேக நபர்கள் இம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

21.09.1992 (வீ) 0000000000
ஜே.வி.பி.யின் வன்செயல் காலத்தில் ஜே.வி.பி.யின் பெயரால் தனிநபர் கொலைகள், ஆட்கடத்தல், தீவைப்பு போன்ற வன்செயல்களில் ஈடுபட்டதாக 20 இராணுவத்தினருக்கும், இராணுவ உயரதிகாரிகளுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

எம்பிலிப்பிட்டியாவில் 32 பாடசாலை மாணவர் காணாமற் போனது குறித்த விசாரணையில் இத்துடன் தொடர்புடைய 8 இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உடப்புத் தமிழ்க் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டு 10 பேர் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

24.09.1992 (வீ) 000000000
அரசு மீண்டும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும், கொழும்பிலுள்ள பிரபல 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் புலிகளின் 2 பிரதிநிதிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் வெளியாகியுள்ளன.

25.09.1992 (வீ) 0000000000
காலி உடுகம பகுதியில் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக தோட்ட மக்கள் அறிவித்ததையடுத்து அன்றைய தினம் இரவு இனந் தெரியாத கோஷ்டியினர் தொழிலாளர்களின் லயன் கதவுகளை உடைத்து நொருக்கியதுடன், பல இடங்களில் "வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கு மரணதண்டனை" என்ற சுவரொட்டிகளையும் ஒட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

26.09.1992 (வீ) 0000000000
இராணுவத்திற்கு ஆட்திரட்டுவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இராணுவத்தில் சேர விரும்புவோரின் தொகை முன்னைவிடக் குறைந்தே காணப்படுகிறது.

28.09.1992 (வீ) 0000000000
திருகோணமலையில் தேடுதல் வேட்டையின்போது 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள 140 பொலிஸ் நிலையங்களிலும், 11 இராணுவ முகாம்களிலும் 850பேர் கடந்த 4 வருடங்களாக எந்த வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net